ஏப்ரல் 1953

பூஞ்சோலை

95

கௌரவ ஆசிரியர்: அழ.வள்ளியப்பா

The favourite magazine for boys and girls PRICE 4 ANNAS.

பூஞ்சோலை

மலர் 3	1, ஏப்ரல், 1953	இதழ் 1

பொருளடக்கம்

நாலு விரல் பையன் ... 5
ஐந்தாண்டு முடிவு ... 7
வம்புத் தம்பி ... 16
முனியனின் சமர்த்து ... 17
குள்ளப் பசு ... 22
என் தெய்வம் ... 28
சுதாகருடன் $2\frac{1}{2}$ மணி ... 34
எல்லாம் நன்மைக்கே ... 42
பயத்துக்கு மருந்து ... 45
பளிங்கு மண்டபம் ... 49
இரண்டு பெண்டாட்டிக்காரர் ... 59
கேள்வி : பதில் ... 62
இளிச்சவாயன் எழுதுகிறான் ... 65
ராஜுவின் மோட்டார் ... 70
திருக்குறள் போட்டி ... 74
வேடிக்கைக் கதைகள் ... 75

தமிழ்நாடு ஆவணக் காப்பக நாகை
19249

பெயர் :- ....

தெரு : ....

ஊர் ....

ஜில்லா ....

மூன்றாவது ஆண்டு

இந்த இதழைப் பார்த்தவுடனே "அடே! இது என்ன 'பூஞ்சோலை'யின் அளவு குறைந்துவிட்டதே!" என்றுதானே நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள்? ஆம், உயரத்தில் ஓரங்குலமும், அகலத்தில் அரை அங்குலமும் குறைந்திருக்கிறது. சாதாரணப் புத்தக அளவில் இருந்தால் அழகாகவும், அடக்கமாகவும் இருக்கும் என்று கருதியே இப்படிச் செய்திருக்கிறோம்.

'அளவில் குறைந்துவிட்டது' என்று மட்டும் கூறுகிறீர்களே, பக்கங்கள் எத்தனை என்பதைப் பார்த்தீர்களா? கணக்குப் போட்டுப் பார்த்தால், அளவு குறைந்ததற்கு நஷ்டஈடாக 8 பக்கங்கள்தான் கூட்டலாம். ஆனால், நாங்கள் 16 பக்கங்கள் கூட்டியிருக்கிறோம். 64 பக்கங்களிலிருந்து 80 பக்கங்கள்! எல்லாம் உங்களுக்கு அதிகமான விஷயங்களைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான்!

'பூஞ்சோலை' இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்டது. இது மூன்றாவது ஆண்டின் முதல் இதழ். கடந்த இரண்டு ஆண்டுகளாகப் 'பூஞ்சோலை' உங்களின் அறிவு வளர்ச்சிக்கும், குண வளர்ச்சிக்கும் எவ்வளவு தூரம் மனமாரப் பாடுபட்டு வந்திருக்கிறது என்பதை நீங்களே அறிவீர்கள்.

'பூஞ்சோலை'யின் வளர்ச்சியை இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து கவனித்துவரும் பல அறிஞர்களின் வாழ்த்துரைகளை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். அறிஞர்களின் வாழ்த்தும், அன்புத் தம்பி தங்கைகளின் ஆதரவும் இருக்கும் போது 'பூஞ்சோலை'க்கு எந்தவிதமான குறையுமே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

'பூஞ்சோலை'யின் வெளித்தோற்றத்தில் மட்டுமே மாறுதல் இருப்பதாக நினைத்துவிடாதீர்கள்! உள்ளேயும் பல மாறுதல்கள் செய்திருக்கிறோம். என்னென்ன மாறுதல்கள் என்பதை நாங்கள் சொல்லத் தேவையில்லை; நீங்களாகவே தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்!

—அழ. வள்ளியப்பா

அறிஞர்கள் வாழ்த்துகிறார்கள்

பூசை புரிந்துலகு
போற்றும் திருச்செந்தில்
ஈசன் குமரன்செய்
இன்னருளால்—வாசமிகு
புத்தம் புது மலர்கள்
பூத்திந்தப் 'பூஞ்சோலை'
நித்தமும் வாழ்க
நிலத்து

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

இளைஞருக் கெல்லாம் இன்பச் சுனையாய்
மற்றுள பேர்க்கும் மகிழ்தற் கிடமாய்
கண்ணைக் கவர்ந்து கருத்தை நிறுத்தி
அன்பும், அறிவும், அமைதியும் காட்டி
சத்திய சந்த சன்மார்க் கங்களை
சொந்தமாக் கொள்ளச் சிந்தனை தூண்டும்
மணமிகும் பலவித மலர்களைத் தருகிற
'பூஞ்சோலை' செழித்துப் புகழோங்கி வாழ்க.

—ஆஸ்தான கவிஞர் வெ. இராமலிங்கன்.

சிறுவர் சிறுமியர்களுக்காகச் சிறப்பாக நடைபெறும் இரண்டு மூன்று நல்ல தமிழ்ப்பத்திரிகைகளில் 'பூஞ்சோலை' ஒன்று. 'பூஞ்சோலை' இளைஞர்களுக்கு எற்ற இனிய பூஞ்சோலை. அதன் நறுமணம் மேலும் மேலும் ஓங்கி எங்கும் பரவுக.

—பெ. தூரன்,
பிரதம ஆசிரியர், தமிழ் கலைக் களஞ்சியம்.

'பூஞ்சோலை'யை எங்கள் குழந்தைகள் பக்கம் விடாமல் வந்த முதல் நாளே படித்துவிடுகிறார்கள். இதிலிருந்தே குழந்தைகளின் உள்ளத்தை இப்பத்திரிகை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ள தென்பது புலனாகும்.

'பூஞ்சோலை' உலவ ஆரம்பித்தபின் தமிழ் நாட்டில் குழந்தைப் பத்திரிகைகள் பல புறப்பட்டிருக்கின்றன; முன் நடந்துவந்தனவும் தரம் உயர்ந்துள்ளன. ஆகையால், தமிழ் நாட்டில் குழந்தைகளின் பத்திரிகைகள் வளமானதற்கும், தரம் உயர்ந்ததற்கும் 'பூஞ்சோலை'யே தூண்டுகோல் என்று நான் கருதுகிறேன். இதன் இதழ்கள் தமிழ்நாட்டிலுள்ள பாடசாலைகள்தோறும் போய் எட்டவேண்டும்; இல்லங்கள் தோறும் போய் எட்டவேண்டும்.

—ரா. வே. ருத்ரப்பசாமி,
ஜில்லா கல்வி அதிகாரி, மதுரை.

'பூஞ்சோலை' இளைஞர்கள் திளைத்து விளையாடி, நல்லறிவும் நல்லுணர்ச்சியும் பெற்று நிறை வளர்ச்சியடைவதற்குரியதொரு பூங்கி

ரிகை என்பதே எம் கருத்து. 'பூஞ்சோலை', இனிப்பு என்னும் பெயரில் நஞ்சை யூட்டும் சில பத்திரிகைகள், நூல்கள் போலன்றிப் பாலர்களின் நலன் கருதியே நடந்துவருவது பிரத்யட்சம். ஸ்ரீ. அழ. வள்ளியப்பா அதன் ஆசிரியராக இருந்து நடத்திவருவது பாலர்களின் பாக்கியமே.

—ப. கோதண்டராமன்,
காரியதரிசி, தமிழ் எழுத்தாளர் சங்கம்.

'பூஞ்சோலை'யைப் பற்றி யான் எழுதவேண்டிய குறிப்பு என்ன இருக்கிறது? அதனை மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

என் மகன்—சிறுவன்—நம்பி அதனைக் கண்டவுடன் முகமெல்லாம் மலர்ந்து பெருமகிழ்ச்சியோடு பிரித்துப் படித்துப் பயன்பெறுவதைக் காணும்போதுதான், அதன் அருமை எனக்கு நன்கு விளங்குகிறது.

உங்கள் முயற்சி வாழ்க, வெல்க. —டாக்டர் மு. வரதராசனர்.

சிறுவர் சிறுமியாது அறிவு வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டில் தங்கள் பத்திரிகை சிறந்ததொண்டு செய்துவருகிறது. பொது அறிவு வளர்வதற்கு மிகவும் உபயோகமாக இருப்பதால் பெற்றோர்கள் ஒவ்வொருவரும், தங்கள் குழந்தைகளுக்கு வாங்கி அளிப்பது நலம்.

—டாக்டர் கே. வெங்கடசாமி, B.A., M.B. B.S., D.O.

தமிழ் நாட்டின் சிறுவர் சிறுமிகளுக்காக நடத்தப்படும் தங்கள் 'பூஞ்சோலை' யைக் கண்ணுற்றேன். பூஞ்சோலையில் பலவித நறுமண மலர்கள் பூத்துக் குலுங்கி இலக்கியவாடை வீசிக்கொண்டிருப்பதை நுகர்ந்தேன். பெரு மகிழ்ச்சி.

மேலை நாடுகளில் பாலர் பத்திரிகைகளுக்குப் பெரு மதிப்புண்டு. அதனால், அவர்கள் பெரும் பயனை அடைந்துவருகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். சிறுவர்கள் புரியும் குற்றங்களை (Juvenile Crimes) ஓரளவிற்குத் தடுக்க முடியும். சிறுவர் சிறுமியர் பால்யத்தில் சில கெட்ட பழக்கவழக்கங்களுக்கு இரையாக நேர்ந்தால், அவர்கள் வளர்ச்சியடைவதுபோல் அவர்களுள்ளே பதிந்திருக்கும் விஷ எண்ணங்களும் வளர்ச்சியடைகின்றன. நாட்டிலே கொலை, கொள்ளை முதலிய குற்றங்கள் நடப்பதற்கு இதையும் ஒரு காரணமாக எடுத்துக் காட்டமுடியும்.

தாங்கள் இப்பொழுது செய்து வருவதுபோல் சிறுவர் சிறுமிகளின் அறிவு வளர்ச்சிக்காக மென்மேலும் பாடுபட்டு, அவர்களுக்கு நீதியைப் போதித்து, நேர்மையைச் சொல்லிக்கொடுத்து, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கச் செய்து, ஒழுக்கத்தை உயரச்செய்து, எதிர்காலத்தில் நம் தேசத்தைப் பலதுறைகளிலும் மேம்பாடடையச் செய்யக்கூடிய புத்துலக சிற்பிகளாக அவர்களை ஆக்கவேண்டும். அது தங்களைப்போலுள்ள பத்திரிகையாளர்கள் கையிலிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

தங்களுக்குத் தமிழ் நாட்டில் பெரும் ஆதரவு திரண்டு, 'பூஞ்சோலை' மேலும் மேலும் வளர்ச்சியடைய விரும்புகிறேன்.

—விஞ்ஞானி ஜி. டி. நாயுடு.

நாலு விரல் பையன்



"டேய், டேய், அவன் காலைப் பாரடா!"

"என்னடாப்பா அவன் காலிலே அதிசயம்!"

"சரியாய்ப் பாரேன். அவன் இடது கால் விரலைப் பார்த்தால் அதிசயம் தானாய்த் தெரிகிறது!"

"ஆமாண்டா, இது என்ன! இவனுக்கு இடது காலிலே நாலே நாலு விரல் தான் இருக்கிறது! ஒருவிரல் எங்கே போய்விட்டதாம்!"

"எங்கேயும் போகவில்லை. சரியாகப் பார், இரண்டாவது விரலும் மூன்றாவது விரலும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருப்பதை!"

"அடடே, ஆமாண்டா! நாலு விரல்தான் இருந்தாலும், நடையைப் பார்த்தாயா? எவ்வளவு முறுக்கு!"

தெரு வழியாகச் செல்லும் ஒரு சிறுவனைப் பார்த்து, இப்படி இரு பையன்கள் கேலி செய்ய ஆரம்பித்தார்கள்.

பாவம், அந்தச் சிறுவன் என்ன செய்வான்? வேண்டுமென்றா அவன் அப்படி நாலு விரலுடன் நடந்தான்? பிறக்கும்போதே அவனுக்கு இடதுகாலில் நாலு விரல்கள் தான் இருந்தன.

அவன் ஒரு பணக்காரப் பையனாக இருந்தாலும், காலிலே 'பூட்ஸ்' அணிந்து அதை மறைத்துக் கொண்டு விடலாம். ஆனால், அவனோ பரம ஏழை. அவன் அப்பாவுக்குச் செருப்புத் தைக்கும் தொழில். எப்படி 'பூட்ஸ்' வாங்க முடியும்?

இயற்கையாக உள்ள இந்தக் குறையைக் கண்டு கேலி செய்தனர், அவன் நண்பர்களும், மற்றவர்களும். இது அவனுக்கு ஆத்திர மூட்டியது. சில சமயங்களில் அந்த ஆத்திரம் அதிகமாகிவிடும்! கோபம் வந்துவிடும். அவர்களை அடித்து நொறுக்கிவிடுவான்! எத்தனையோ தடவைகள் 'குஸ்தி' போட்

டிருக்கிறுன்; வெற்றியும்பெற்றிருக்கிறுன்.

அவன் யார்?

அவன்தான் டேவிட்,

"அவன் யார் டேவிட்?" என்று கேட்கிறீர்களா?

டேவிட், கோபா, இவாஜேவிச் என்றெல்லாம் அவனுக்குப் பல பெயர்கள் உண்டு. ஆனுலும், 'இரும்பு மனிதன்' என்று சொன்னுல் தான் உங்களுக்குப் புரியும்.

இப்போதும் புரியவில்லையா?

சரி, 'இரும்பு மனிதன்' என்பதை ரஷ்யாவில் எப்படி அழைப்பார்கள் என்பதைச் சொன்னுல் புரிந்துவிடும்.

'ஸ்டாலின்!'

'ஸ்டாலின்' என்ருலே 'இரும்பு மனிதன்' என்பது தான் பொருள்.

செருப்புத்தைப்பவரின் மகனுகப் பிறந்து திசையெங்கும் போற்றப்படும் ரஷ்யத் தலைவர்—சமீபத்தில் காலஞ்சென்ற ஸ்டாலின்தான் அந்த நாலு விரல் பையன்!

திருச்சிக் கட்டுரைப் போட்டி முடிவு

இப்போட்டியில் மொத்தம் கலந்துகொண்ட திருச்சித் தம்பி தங்கைகள்—46

முதற் பரிசு

தித்திக்கும் திருச்சி நகர்: V. S. பத்மா, 14, ராக்போர்ட் அக்ரஹாரம், தெப்பக்குளம், திருச்சி

இரண்டாம் பரிசு

எங்கள் திருச்சி: S. ஜானகிராமன், 60, பெரிய சௌராஷ்டிர தெரு, உறையூர், திருச்சி

போட்டிக்கு வந்த கட்டுரைகளை நாங்கள் திருச்சிக்கு அனுப்பினேம். அங்கு அவற்றைப் பரிசீலனை செய்து தீர்ப்புக் கூறியவர்கள் :

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர் அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்.

வித்துவான் த. கி. குப்புசாமி ஆழ்வார் அவர்கள்,
St. Joseph's College, Trichy.

முதற் பரிசுக் கட்டுரையை இந்த இதழிலே வெளியிடக் கருதினேம்; இயலவில்லை. அடுத்த இதழில் கட்டாயம் வெளியிடுவோம்.

—ஆசிரியர்

ஐந்தாண்டு முடிவு

பெ. ரத்தினம்

காட்சி-1

(குட்டி எழுத்தாளன் கிட்டு, நாற்காலியைச் சரியாகப் போட்டுக் கொண்டு உட்காருகிறான். பிறகு, மேஜை அறையைத் திறந்து பேனாவை எடுத்து ஒரு தாளில் எழுதிப் பார்க்கிறான். பேனாவில் மை இருந்தால்தானே எழுதுவதற்கு? மைப் புட்டியை எடுத்து வைத்துக்கொண்டு மை அடைக்கும் குழாயைத் தேடுகிறான். அது அகப்படவில்லை! பிறகு, புட்டியைக் கவிழ்த்துப் பேனாவில் மைப் போடுகிறான். மை தவறித் தாளிலே கொட்டிவிடுகிறது! பிறகு, அந்தத் தாளைத் தூக்கி எறிந்து விட்டு, எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொள்கிறான். உடனே கற்பனை என்னும் குதிரையை, மூளை என்ற வண்டியில் பூட்டி, பேனா என்னும் சவுக்குக் கொண்டு காகிதம் என்னும் சாலையில் வேகமாக ஓட்ட ஆரம்பிக்கிறான்.)

கிட்டு: (கற்பனை செய்கிறான்) உம்... பயங்கரக் குகையில் மாயத்தேவன் நுழைகிறான். உடனே, முக மூடித் தம்பி துப்பாக்கியை மாயத் தேவன் முதுகில் வைத்து அழுத்துகிறான்... அப்புறம்...

ராஜம் அம்மாள்: (சமையல் அறையில் இருந்தபடியே) டேய் கிட்டு, இங்கே வாடா!

கிட்டு: அட ராகவா! நான் கதை எழுத ஆரம்பித்த வேளை, சரியான எமகண்டம் போலிருக்கிறது. பேனாவை எடுத்தால் மை இல்லை;

மையை ஊற்றினல் தாளில் கொட்டுகிறது! அதை யெல்லாம் சரிப்படுத்திக்கொண்டு எழுத ஆரம்பித்தால் அம்மா வேறு கூப்பிடுகிருள்!

ரா. அ: (கோபமாகக் கத்துகிருள்) டேய் பயலே, கிட்டு! நான் தொண்டை கிழியக் கத்துகிறேனே! உன் காது என்ன செவிடாகிவிட்டதா?

(கிட்டு எழுந்து சமையலறைக்குச் செல்கிருன்)

கிட்டு: என்னம்மா உன் தொண்டை கிழிந்து விட்டதா? டாக்டரை அழைத்துவரவா?

ரா. அ: டேய், இந்த விகடத்தை யெல்லாம் உன் கதையிலே எழுதுடா. முதலிலே கடைக்குப் போய் வாடா!

கிட்டு: (ஆத்திரமாக) கடைக்குப் போவதற்கும், கட்டைமேலே போவதற்கும் உனக்கு வேளை, நாழிகை கிடையாதா?

ரா. அ: அது சரி. அப்படித் தலை போகிற காரியம் என்னத்தை இப்போது வெட்டிச் சாதிக்கிருய்?

கிட்டு: வெட்டிச் சாதிக்கவில்லை; எழுதிச் சாதிக்கிறேன்.

ரா. அ: ஓ...! எழுத்தாளர் கிட்டு கதை எழுத ஆரம்பித்திருக்கிறீரோ!... போடா மண்டூகம். நீயும்தான் ஐந்து வருஷமாகக் கதை எழுதுகிருய்! ஒன்ருவது அச்சாபீஸ்காரன் கையில் பட்டு, ஒரு பத்திரிகையிலாவது வெளியாக வேண்டுமே! அது கிடையாது. எழுதி அனுப்ப வேண்டியது. அது போன இரண்டு நாட்களில் திரும்பி வர வேண்டியது; பத்திரமாகப் பெட்டியில் படுத்துத் தூங்க வேண்டியது!

கிட்டு: என்னம்மா, என்கதையை அவ்வளவு கேவலமாக நினைத்துவிட்டாய்! நான் கதை எழுத ஆரம்பித்துஎன்ன ஒரு மாமாங்கமா ஆகி விட்டது? அற்ப காலம் ஐந்துவருஷம்தானே ஆகிறது? ஏது......சரியாகச் சொல்லப் போனல் நாலு வருஷம் பதினேறு மாதம் இருபத்தொன்பது நாட்கள்தாஞகின்றன! நாளைக்குத்தான் சரியாக ஐந்து வருஷம் ஆகப்போகிறது! அதற்குள் அவசரப்பட்டால் முடியுமா?

ரா. அ: ஆமாம்.......ஐந்து வருஷம் அற்ப காலம்தான். இன்னும் நூறு வருஷங்கள்

வரை, பேப்பருக்கும், மைக்கும், தபால் தலைகளுக்கும் காசைக் கொட்டி அழுது கொண்டே இரு. எப்படியோ போ....முதலிலே போய் வேர்க்கடலை எண்ணெய் ஒரு சேர் வாங்கிவா.

கிட்டு: எதற்கம்மா எண்ணெய்?

ரா. அ: அப்பா ஆசைப்பட்டு வாழைக்காய் வறுவல் செய்யச் சொல்லியிருக்கிறார்! நல்ல 'காரல்' இல்லாத எண்ணெயாகப் பார்த்து வாங்கிக்கொண்டு சீக்கிரமாக வா.

கிட்டு: ரைட்டோ! அம்மா, வறுவல் ஜோராக இருக்க வேண்டும். கற்பனை ஓடாத சமயத்தில், ஒரு வறுவலை எடுத்து வாயில் போட்டால், கற்பனை ஊற்றுக் கரை புரண்டோட வேண்டும்.

(புட்டியை எடுத்துக் கொண்டு கடைக்குப் போகிறான், கிட்டு)

காட்சி-2

(எண்ணெய் வாங்கி அம்மாவிடம் கொடுத்துவிட்டு பழையபடி கதை எழுத ஆரம்பிக்கிறான், கிட்டு)

கிட்டு: (கற்பனை செய்கிறான்) உம்...கதையை எதிலே விட்டோம்? உம்... பயங்கரக் குகையில் மாயத் தேவன் நுழைகிறான். முகமூடித் தம்பி, அவன் முதுகில் துப்பாக்கியை வைத்து அழுத்துகிறான் ......அப்புறம்.......?

(இந்தச் சமயத்தில் அவன் நண்பன் ரங்கு வருகிறான்)

ரங்கு: என்னடா கிட்டு, பேனா, பேப்பர் சகிதமாக...?

கிட்டு: வாடா ரங்கு, வா! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

ரங்கு: ஏன்? ஏதாகிலும் 'அல்வா', 'இல்வா' வாங்கி வைத்திருக்கிறாயா?

கிட்டு: போடா அல்வாப் பைத்தியம்! நான் இப்பொழுது ஒரு 'ஸ்டண்ட்' கதை, அதாவது 'பயங்கரக் குகை' என்ற கதையை எழுத ஆரம்பித்திருக்கிறேன். கதையில் திடுக்கிடும் சம்பவங்களைப் பக்கத்துக்குப் பக்கம் புகுத்தப் போகிறேன். ஒருவன் சோனியாக இருந்தாலும் சரி, இந்தக்கதையைப்படித்ததும், வீரமும், தீரமும் தானாகவந்து சேர்ந்துவிடும்! இன்னும்....

ரங்கு: போதும் நிறுத்தடா, கதைப் பைத்தியம்! நீ பேனாவும் கையுமாக இருக்கும்பொழுதே எனக்குத் தெரியுமே, ஏதாகிலும், 'பயங்கரம்' 'பிசாசு' 'கொள்ளை' என்ற கதைகளைக் கிறுக்கிக்கொண்டிருப்பாயென்று! நீ சொல்

வித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா?

கிட்டு: என் கதையை நீயுமா 'பரிகாசம்' செய்கிருய்? என் கதைகளின் மகிமை இந்தப் பத்திரிகாசிரியர்களுக்குத் தெரியவே இல்லை! என் கதைகள் மறைந்து கிடக்கும் மாணிக்கம்! பதுங்கிக் கிடக்கும் பத்தரை மாற்றுத் தங்கம்! என் கதைகள் வெளியாக ஆரம்பித்தால், எங்கே தங்கள் பெயர் மங்கி மறைந்து விடுமோ என்று பயந்துதான் என் கதைகளை வெளியிடாமலிருக்கிருர்கள், அந்தப் பத்திரிகாசிரியர்கள். நான் முன் ஒரு கதையை எழுதி 'பீமண்ணு' காரியாலயத்திற்கு அனுப்பினேன். கதையின் பெயர் 'பிசாசுத் தம்பி'. கதையை நன்ருகக் காரசாரமாகத்தான் எழுதினேன். ஆனுல்....

ரங்கு: உப்புப் போட மறந்து விட்டாய்போலிருக்கிறது!

கிட்டு; போடா மடையா! என் கதையை உங்கள் வீட்டு வெண்டைக்காய் சாம்பார் என்ரு நினைத்துக்கொண்டாய்?

ரங்கு: (சிரித்துக் கொண்டே) என்னவோ 'காரசாரம்' என்ருயே, அதனுல் கேட்டேன்!

கிட்டு: 'காரசாரம்' என்ருல் கதை அவ்வளவு ஜோராக இருக்குமென்று அர்த்தம்!

ரங்கு: ஓ, அப்படியா! உம்...கதையைப் அனுப்பினுய்...?

கிட்டு: அது என்னடா வென்ருல், போன இரண்டு தினத்திற்குள்......

ரங்கு: சுவரிலடித்த பந்து போல் உன்கைக்கு வந்துசேர்ந்துவிட்டது என்று சொல்ல வெட்கமாக இருக்கிறதா? அது சரி, பீமண்ணு விடத்தில் 'பிசாசுத் தம்பி' என்ன செய்ய முடியும்? அப்படி யென்ருல் நீ எழுதிய எல்லாக் கதைகளையும் பத்திரமாக வைத்திருக்கிருயா?

கிட்டு: என்னடா, அப்படிக் கேட்கிருயே! என் உயிரைக்கூட நான் பொருட்படுத்தமாட்டேன். அதைவிட மேலாக நான் அவைகளைக் காப்பாற்றி வருகிறேனே!

ரங்கு: இந்தப் 'பயங்கரக் குகை'யை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பிப் பயமுறுத்தப் போகிருய்?

கிட்டு: உம்......அதைச் சொல்ல மறந்துவிட்டேனே! இதுவரையில் ஐம்பது கதைகளுக்குமேல் எழுதி எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினேன்; திரும்பிவந்துவிட்டன! 'ஜிலேபி' பத்திரிகை ஒன்றுதான் பாக்கி யிருந்தது. அதற்கும் ஒரு கதை அனுப்பினேன். நாலு நாட்களாகின்றன! இன்னும் திரும்பிவரவில்லை! என் கதையின் மகிமை அந்த ஆசிரியருக்குத்தான் தெரிந்திருக்கிறது! பார், என் கதையை! என் கதைதான் 'ஜிலேபி'யிலேயே முதன்மை ஸ்தானம் பெறும்! என் கதைதான் அட்டைப் படக் கதையாக வரப் போகிறது!

ரங்கு: அட்டைப் படக் கதையாக வரப்போகிறதோ; அனுப்பிய உனக்கே திரும்பி வரப்போகிறதோ! இனி, நீ அனுப்பவேண்டிய காரியாலயமே கிடையாது.

கிட்டு: இந்தக் கதை கண்டிப்பாகத் திரும்பிவராது!

ரங்கு: டேய் கிட்டு, நான் ஒரு யோசனை சொல்கிறேன்; கேட்கிறாயா?

கிட்டு: என்னடா?

ரங்கு: உன் அவா என்ன? உன் கதை அச்சாபீஸ்காரர் கையில் பட்டு, பத்திரிகையில் வெளியாகவேண்டும்! அதை எல்லோரும் படிக்கவேண்டும் என்பதுதானே! அதற்குப் பதில் உன் கதைக்கட்டுகளைப் பலசரக்குக் கடையில் விற்போம். அச்சாபீஸ்காரர் கையில் படுவதற்குப் பதில், பலசரக்குக் கடைக்காரர் கையிலாவது படட்டும். அவர் பொட்டலம் மடித்து எல்லோருக்கும் கொடுப்பார். பொட்டலம் வாங்கிச் செல்பவர்கள் உன் கதையைப் படித்துப் பார்ப்பார்கள். உன் புகழ் அப்படியாகிலும்பரவட்டுமே! நாமும் அந்தப் பணத்திற்கு ஜோராக 'அல்வா' சாப்பிடலாம். எப்படி என் யோசனை?

கிட்டு: (ஆத்திரமாக) என்ன! என் கதை பொட்டலம் மடிக்கத்தான் லாயக்கு என்கிறாயா? இன்னொரு முறை அப்படிச் சொன்னாயோ! பிறகு பார்...!

ரங்கு: சரியப்பா, நான் வருகிறேன். நாளைத் தபாலை எதிர்பார்ப்போம்.

(ரங்கு போகிறான்)

காட்சி - 3

(கிட்டு மறுபடியும் கதை எழுத ஆரம்பிக்கிறான். வரதராஜன் (கிட்டுவின் அப்பா) கை அலம்பிக்கொண்டு வறுவல் சாப்பிடச் சமையலறையில் நுழைகிறார்)

கிட்டு: வெட்டிப் பயல்

கள். நம் வேலையைக் கெடுக்க வந்துவிடுகிருன்கள்.

வரதராஜன்: (சமையலறையிலிருந்தபடியே) டேய் கிட்டு, இங்கே வாடா?

('வறுவல் சாப்பிடத்தான் அப்பா கூப்பிடுகிருர்' என்று நினைத்துக்கொண்டு சமையலறைக்குச் செல்கிருன், கிட்டு)

வ. ரா: (கோபமாக) ஏண்டா, கதைப் பைத்தியம்! வேர்க்கடலை எண்ணெய் வாங்கி வா என்ருல் வேப்பெண்ணெயை வாங்கி வந்திருக்கிருயே!

கிட்டு: அடடா...கற்பனை செய்யும்ஜோரில்வேர்க்கடலை எண்ணெய்க்குப் பதில் வேப்பெண்ணெயை வாங்கி வந்துவிட்டேன் போலிருக்கிறது!

வ. ரா: போடா, ராஸ்கல்! கற்பனையா செய்கிருய்?

(சீறிவிழுந்து அவன் கன்னங்கள் இரண்டிலும் மாறி மாறி அறைகிருர்)

ராஜம் அம்மாள்: அறியாப் பிள்ளை செய்துவிட்டான். ஏன் இப்படிக் கோபித்துக்கொள்கிறீர்கள்? இப்படி அடித்தால் அவன் உடம்பு என்னத்துக்காகும்!

வ. ரா. உனக்கு இருக்கும் புத்திதானே அவனுக்கும் இருக்கும். அவன்தான் அப்படி வாங்கிவந்தான். உனக்குப் புத்தி இல்லையா? வேர்க்கடலை எண்ணெய்க்கும், வேப்பெண்ணெய்க்கும் வித்தியாசம் தெரியாமல்வறுவலைச்சுட்டுக் கொட்டி வைத்திருக்கிருயே! என் ஆசையில் மண்ணைப் போட்டீர்கள், நீங்கள் இரண்டுபேரும். கதை எழுதுகிருனும், கதை! போடா, போ. இனிமேல் கதை கிதை எழுதினுயோ தோலை உரித்து விடுவேன்!

(கிட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போகிருன். ராஜம் அம்மாள் வறுவலைக் கொண்டுபோய்க் குப்பைத்தொட்டியில் கொட்டுகிருள்.)

காட்சி - 4

(மறுநாள். காலை மணி ஒன்பது இருக்கும். வரதராஜன் வீட்டில் இல்லை. இதுதான் சமயமென்று கதை எழுத ஆரம்பிக்கிருன், கிட்டு. இந்தச் சமயத்தில் தபால்காரர் வருகிருர். கிட்டு ஆவலோடு எழுந்து ஓடுகிருன். தபால்காரர் ஒரு கார்டையும்

நாலைந்து காகிதங்கள் அடங்கிய ஒரு 'புக்போஸ்ட்'டையும் கொடுத்துவிட்டுப் போகிறார்)

கிட்டு: (கார்டைப் படிக்கிறான்)

'கதை எழுதுகிறேன்' என்று கண்டதையெல்லாம் காட்டுமிராண்டித் தனமாக எழுதும் கிட்டுவுக்கு,

உன் 'மோட்டார்க் கொலை' என்ற கதையைப் படித்துப் பார்த்தேன். இதைப் போன்ற மட்டரகமான கதைகளுக்கு 'ஜிலேபி' யில் இடம் கிடையாது! ஆகையால், இதைத் திருப்பி அனுப்பியிருக்கிறேன். இதே போன்ற கதைகளை எழுதிப் பத்திரிகாசிரியர்களுக்கு இனி வீண் சிரமம் கொடுக்காதே! எனக்கும் அனுப்பாதே! அப்படி அனுப்பினால், அதைப் படித்துக்கூடப் பார்க்க மாட்டேன். திருப்பியும் அனுப்ப மாட்டேன் என்பதைத் தெரிந்துகொள்!

இப்படிக்கு,
அன்புள்ள,
'ஜிலேபி' ஆசிரியர்.

அடப் பரமசிவமே! ரங்கு சொன்னதுபோல் ஆகிவிட்டதே! இனிமேல் நான் கதை அனுப்பவேண்டிய காரியாலயமும் கிடையாது; நான் எழுதவேண்டிய அவசியமும் கிடையாது! நான் கதை எழுத ஆரம்பித்து இன்றுடன் ஆண்டும் ஐந்து முடிந்துவிட்டது! இனிமேல் ரங்கு சொன்னதைப் போல் கதையைப் பலசரக்குக்கடையில் விற்க வேண்டியதுதான்! விற்றுவரும் பணத்தில் அல்வாவாவது வாங்கி வயிறு குளிரச் சாப்பிடலாம்.

(இச்சமயத்தில் அவன் தங்கை வனஜா குதித்துக் கொண்டே அவனிடம் ஓடி வருகிறாள்)

வனஜா: அண்ணு! அண்ணு! உன் கதையெல்லாம் ரொம்ப ரொம்ப உபயோகமாயிருக்கிறது, அண்ணு, என்னுடன் வந்து பாரேன்.

கிட்டு: (ஆச்சரியத்துடன்) என்ன, உபயோகமாயிருக்கிறதா! எங்கே?

வனஜா: வாயேன், என் பின்னாலேயே.

(கிட்டு வனஜாவைப் பின் தொடர்கிறான். வனஜா அடுப்பங்கரைக்குள் நுழைகிறாள். கிட்டுவும் உள்ளே நுழைகிறான். உள்ளே பார்த்ததும் திடுக்கிடுகிறான்.)

கிட்டு: என்ன! என் கதைகளையெல்லாம் அடுப்பிலே வைத்து எரிக்கிறீர்களே! ஐயோ! என்னம்மா, நான் ஐந்துவருஷமாகக் கைவலிக்க, இடுப்பு ஒடிய எழுதிய கதைகளெல்லாம் இப்படி அக்கினி பகவானுக்கு அர்ப்பணமாமாகின்றனவே!

ரா. அ: அட, யாருக்கும் தான் பிரயோசனப்பட வில்லை. சமையலுக்காவது பிரயோசனப்படட்டுமே!

வனஜா: ஆமாம் அண்ணா, நீ கதை எழுத ஆரம்பித்து இன்றோடு ஐந்தாண்டு பூர்த்தியாகிவிட்டதல்லவா? இந்த விழாவை இப்படிக் கொளுத்தியாவது கொண்டாடலாம், அண்ணா!

கிட்டு: சீ கழுதை, நீதானே இந்தக் கதைக் கட்டை எடுத்துவந்து அம்மாவிடம் கொடுத்தாய்?

வனஜா: நானாகவா கொடுத்தேன்? அப்பா நேற்றுச் சாயங்காலம் போட்ட உத்தரவைத்தான் நானும் அம்மாவும் அமுல்நடத்துகிறோம்.

கிட்டு: என்ன! அப்பாவா இப்படிக் கொளுத்தச் சொன்னார்?

ராஜம் அம்மாள்: ஆமாண்டா, ஏன் எங்கள்மேல் எரிந்து விழுகிறாய்? உன் அப்பாவிடம் போய் உன் கைவரிசையைக் காட்டு.

வனஜா: அண்ணா, ஆத்திரப்படாதே! நேற்று அப்பாவுக்கு உன் மேலும், உன் கதைகள் மேலும் அபாரக் கோபம். அப்போது, அம்மா வந்து விறகு வாங்கப் பணம் கேட்டாள். உடனே அப்பா, 'பணமும் கிடையாது; மண்ணாங் கட்டியும் கிடையாது. வேண்டுமானால், உன் பிள்ளை எழுதிவைத்திருக்கிற கதைகளையெல்லாம் அடுப்பிலே வைத்துக்கொளுத்து. இரண்டு நாளைக்குத் தாராளமாகவரும்' என்றார். உடனே அம்மா, 'ஐயையோ! அவன் எவ்வளவு கஷ்டப்பட்டு எழுதினான்! அடுப்பிலே வைத்து எரிக்கலாமா? வேண்டுமானால், அதைப் பழைய பேப்பர்க்காரனிடம் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தில் விறகு வாங்கிக் கொள்கிறேன்' என்று சமாதானம் கூறினாள். இதைக் கேட்டதும் அப்பாவின் கோபம் அளவு மீறிவிட்டது. 'என்ன, இந்த மட்டரகக் கதைகளைப் பழைய பேப்பர்க்காரனிடம் விற்கவா சொல்கிறாய்? வெகு அழகுதான்! நீ இதைப் பழையபேப்பர்க்காரனிடம் கொடுக்கிறாயாக்கும். அவன் அதை எந்தப் பலசரக்குக் கடைக்காரனிடமாவது கொடுப்பான். அங்கிருந்து உப்பு, பருப்பு வாங்குகிறவர்களுடன் கூடவே இந்தக் கதைகளும் போய்ச் சேரும்.

இவைகளை அவர்கள் படித்து விட்டு, மூளையைக் கலக்கிக் கொள்ளட்டும். அப்படித் தானே! உனக்கும் மூளையில்லை; அவனுக்கும் மூளையில்லை. வீண் பேச்சுக்கு நேரமில்லை. கொளுத்து என்றால், கொளுத்திவிட வேண்டியது தான்! நாளைக் காலையிலேயே இந்த வேலையை ஆரம்பிக்கா விட்டால், அப்புறம் என் கோபம் எங்கே போய் நிற்கும் என்பது எனக்கே தெரியாது' என்று கண்டிப்பாக உத்தரவு போட்டுவிட்டார்....

கிட்டு: அப்படியானல், நான் பட்ட பாடு...

வனஜா: கவலைப் படாதே அண்ணு! இதோ பார், எப்படிக் கொழுந்துவிட்டுப் பிரகாசமாக ஜ்வலிக்கின்றன உன் கதைகள்! அடடா! அற்புதம்! அற்புதம்.

கிட்டு: ஐயோ! ரங்குவின் யோசனைப்படி நேற்றே விற்றிருந்தால் அல்வாவாவது வாங்கித் தின்றிருக்கலாமே! அட ராகவா!

○



மயர்ஸ்

செல்ப் ஆயிலிங்
ஓர்கிங் ஹெட்டுகள்

எவ்வளவு ஆழமுள்ள
கிணறுகளிலிருந்தும் போரிங்கிலிருந்தும்
தண்ணீர் எடுக்கக்கூடியவை

மற்றும் ஆட்டோமாடிக்
வாட்டர் ஸிஸ்டம்கள் பல சைஸ்கள்

ஸோல் ஏஜண்டுகள்:

வாட்டர் சப்ளை
ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்

23-24, செகண்டு லைன் பீச்
மதருஸ் - 1

வம்புத் தம்பி

● 'நிப்' இல்லாத பவுண்டன் பேனவைத் திருடியவனுக்கு ஒரு வருஷம் சிறைத் தண்டனை.

—செய்தி

'நிப்' இல்லாத பேனவைத் திருடியதற்கே ஒரு வருஷம் என்ருல், 'நிப்' உள்ள பேனவைத் திருடினல் எத்தனை வருஷங்களோ?

● ஒரு சீன மந்திரவாதி கத்தியை விழுங்கி வித்தை காட்டிக் கொண்டிருக்கும் போது, கத்தியின் கைப்பிடி உடைந்ததால், மரணமடைந்தார்.

—பம்பாய்ச் செய்தி

பாவம்! அவர் கத்தியை விழுங்கப் பார்த்தார். ஆனல், கத்தி அவர் உயிரையே விழுங்கிவிட்டது!

● தன் அக்காளுக்கு மயக்கமருந்து கொடுத்து அவளுக்குச் சொந்தமான தங்கக் கட்டியைத் திருடிச் சென்றவருக்கு வேறெருவர் டீயில் மயக்கமருந்து கொடுத்து அந்தத் தங்கக் கட்டியை அபேஸ் செய்துவிட்டார்!

—மதுரைச் செய்தி

சபாஷ்! அக்காளிடம் அவர் வாங்கிய விலக்கே, அது விலைப் போய்விட்டதே!

● ஆடுகள் செடி கொடிகளைத் தின்று விடுகின்றன. அவற்றின் நாச வேலையைநாம் தடுக்க வேண்டும்.

—சென்னைப் பிரதமர்

"நாங்களாவது மரங்களையும், இலைகளையும் தின்று நாசம் செய்கிறோம். ஆனல், மனிதர்களோ எங்களையே பிடித்துத் தின்று நாசம் செய்துவிடுகிருர்களே. இதைக் கேட்க எந்தப் பிரதமரும் இல்லையா!" என்று கேட்கிறது, மனிதர்களுக்குப் பலியான ஆடு ஒன்றின் ஆத்மா.

● மார்ச் 15-ம் தேதியில் குஜராத் செளராஷ்டிரா முதலிய இடங்களில் ஆங்கில எதிர்ப்பு தினம்!

—சூரத் செய்தி

"அடடா! அதே மாதிரி இங்கேயும்ஆங்கிலஎதிர்ப்புவரக்கூடாதா!" என்று ஏங்குகிருன், ஆங்கில பாடத்தில் அரை அட்சரம்கூடத் தெரியாது அடிமேல் அடிவாங்கும் ஓர் அசட்டு மாணவன். 'EYEGOD'

முனியன் சமர்த்து

'கலாவதி'

பெத்தம்மாளுக்கு முனியன் ஒரே பிள்ளை. அவள் அவனை மிகவும் அருமையாய் வளர்த்து வந்தாள். ஒரு சிறு வேலை கூட அவனிடம் கூற மாட்டாள். வெளி உலகமே அவனுக்குத் தெரியாது. எவ்வளவு வீட்டு வேலை இருந்தாலும், கடை கண்ணிக்குப் பெத்தம்மாள்தான் போய் வருவாள். அப்படி அவளுக்கு அசௌகரியமாயிருந்தால் அவளுடைய கணவர் பொன்னுசாமியை அனுப்புவாள்.

"முனியனை அனுப்பு. அவனுக்கும் எல்லாம் தெரிய வேண்டாமா?" என்று சில சமயங்களில் பொன்னுசாமி கூறுவார்.

ஆனால் அவள், "பாவம்! அவனை எதற்கு அனுப்ப வேண்டும்? அவன் போனால், திரும்பி வரும் வரை எனக்குக் கவலையாக இருக்கும். பெரியவனானால் எல்லாம் தானாகவே தெரிந்து விடுகிறது. நானே போகிறேன்" என்று அவளே போய் விடுவாள்.

பொன்னுசாமிக்கு முனியனை இவ்விதம் வளர்ப்பது பிடிக்கவே இல்லை. 'பெரியவனானதும் தானாகவே எப்படி எல்லாம் தெரியும்? அனுபவமிருந்தால் தானே தெரியும்?' என்று வருத்தப்படுவார்.

ஒருநாள், பெத்தம்மாள் அவசர காரியமாய்த் தன் தாயார் வீட்டுக்குப் போகும்படி இருந்தது. முனியனும், பொன்னுசாமியும் மாத்திரம் வீட்டிலிருந்தார்கள். முனியனின் அறிவை அளப்பதற்குத் தக்க சமயம் கிடைத்ததென்று பொன்னுசாமி எண்ணினார். உடனே, முனியனை அருகே அழைத்து, "இன்று மார்க்கெட்டுக்குச் சென்று முற்றல், சொத்தை, சொள்ளை யில்லாத நல்ல காய்கறியாகப் பார்த்து இரண்டு ரூபாய்க்கு வாங்கி வா" என்றார்.

"சரி, கத்தியைக் கொடுங்கள். நறுக்கிப் பார்த்து முற்றல், சொத்தை யில்லாமல் வாங்கி வருகிறேன்" என்றான், முனியன்.

"நீ கத்தியால் நறுக்கிப் பார்த்தால் சொத்தையாயிருந்தாலும் கடைக்காரன் திருப்பி அதை வாங்கிக் கொள்ள மாட்டான். கையால் தொட்டுப் பார்த்துத்

தான் வாங்கவேண்டும்" என்று கூறினர், பொன்னுசாமி.

"அதெப்படி அப்பா?" என்று முனியன் வினவினன். "வெண்டைக்காயானல் நுனியை உடைத்துப் பார். சுலபமாய் உடைந்துவிட்டால் அது பிஞ்சுக்காய். நுனி உடையாமல் நாராகப் பிய்ந்தால் முற்றல் வெண்டைக்காய். அதை வாங்கக்கூடாது. பெங்களூர்க் கத்திரிக்காயானல், முற்றிய காயின்மேல் சிறு முட்கள் இருக்கும். அதிக முட்கள் இல்லாததுதான் பிஞ்சுக்காய். கத்திரிக்காயைக் கையால் தொட்டுப் பார்த்து வாங்க வேண்டும். அதிகநாள் அனுபவத்தில்தான் முற்றல், பிஞ்சு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனல் கறுப்புப்புள்ளி, சிறு துவாரம் இவைகள் இருந்தாலும் அது சொத்தைக் கத்திரிக்காயாகத் தான் இருக்கும். அதற்குள்ளே சில சமயம் புழுக்கள் கூட இருக்கும். சேப்பங் கிழங்கு வாங்கவேண்டுமானல் ஒரு கிழங்கை எடுத்து விரலால் தேய்த்துப்பார். தோல் சுலபமாய் நகர்ந்தால் புதிய கிழங்கு. இல்லாவிட்டால் சேப்பங் கிழங்கு நிறைய வாங்காதே!"

இதற்கிடையில் முனியன் "முருங்கைக்காயை எப்படிப் பார்ப்பது?" என்று கேட்டான்.

"எனக்கு இன்று முடிந்ததையெல்லாம் சொல்லித் தருகிறேன். இன்று உனக்குத் தெரிந்தபடி வாங்கிக்கொண்டு வா. இனிமேல், மார்க்கெட்டுக்கு நாங்கள் போகும்போதெல்லாம் நீயும் வந்தால், உனக்கே எல்லாம் தெரிந்துவிடும். முருங்கைக்காயைக் கையால் முறுக்கிப் பார். முறுக்குவதற்கு நன்ருக வரும் காயாகப் பார்த்து வாங்கு. பீர்க்கங்காய் இருந்தால் உடைத்த காயிலிருந்துகொஞ்சம் வாயில் போட்டுப்பார். கசப்பாயிருந்தால் வாங்காதே. இப்படிச் சுமாராகக் கவனித்து வாங்கு. முற்றல் மாத்திரம் வாங்கிக் கொண்டு வராதே!" என்று கூறி ஒரு பையையும், பணத்தையும் கொடுத்து அனுப்பினர்.

சிறிது தூரம் போனதும் முனியன் திரும்பி அப்பாவைப் பார்த்து, "வாழைக்காய், வாழைத்தண்டு......" என்று கேட்கும்போதே பொன்னுசாமி, "நீ சீக்கிரம் போ. நீயாகப் பார்த்துவாங்கி வா. 'கடைக்காரன் பிஞ்சு என்று சொன்னன்; வாங்கினேன்' என்று மட்டும் சொல்லிக் கொண்டு வராதே! அநேக வியாபாரிகளுக்கு உண்மையே பேசத் தெரியாது.

நமக்குத் திருப்தியானதை நாம் வாங்கிவர வேண்டும். அவ்வளவுதான்!'' என்று கூறி அனுப்பினர்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு முனியன் திரும்பினன். நல்ல வேளையாக அப்பொழுதுதான் அவனுடைய தாயாரும் திரும்பி வந்தாள். முனியன் காய்கறி வாங்கிக்கொண்டு வருவதை அறிந்ததும், அம்மாவுக்கு ஒரே ஆனந்தம். உடனே, "பார்த்தீர்களா! நான்தான் அவன் பெரியவனுனல் எல்லாம் அவனுகவே போய் வாங்கிக்கொணடு வந்துவிடுவான் என்று சொன்னேனே! கடைக்குப் போகாவிட்டால் ஒன்றுமே தெரியாமலா போய்விடும்? எங்கே முனியா, காட்டு பையை? என்னென்னவெல்லாம் வாங்கி வந்திருக்கிருய்; பார்க்கலாம்'' என்று பெருமையுடன் பையை வாங்கினுள்.

மேலாகக் கருவேப்பிலே இருந்தது. அதைப் பார்த்ததும், "இவனுக்குக் கருவேப்பிலேத் துவையல் ரொம்பப் பிடிக்கும். அதை நிறைய வாங்கிக்கொண்டு வந்திருக்கிருன். துவையலுக்குக் காலணுவுக்கு வாங்கினுல் கூடப் போதுமே! உம், முதல் முதலாகக் கடைக்குப்போய் வந்திருக்கிருய். இதில் தப்பு

ஒன்றுமில்லை. கருவேப்பி லைப் பொடி செய்து விடுகி றேன்" என்று கூறிக் கொண்டே பையைக் கீழே கொட்டினுள்.

அதிலிருந்து மிளகாய் மாத் திரம் ஒரு வீசை கீழே விழுந் தது. காய்கறியையே காணும்! உடனே அவளுக்கு 'பகீர்!' என்றது. இதைப் பார்த்த பொன்னுசாமி, "எப்போதாவதுபோய் அனு பவமிருந்தால்தானே! ஒன்றும் வாங்கத் தெரியாமல் வெறும் பையுடன் வந்திருக்கிறுன்" என்று வீட்டிலேயே அவனை உட்கார்த்தி வைத்திருப்பதை இடித்துக் கூறினர்.

"அவன் காரணமில்லாமல் இப்படி வந்திருக்கமாட்டான். ஏன் முனியா, வேறு எந்தக் காயும் உனக்குப் பிடிக்க வில்லையா?" என்று அவனைக் கேட்டாள் அம்மா.

"காய்கறிக் கடையில் காய் கறியே அவனுக்குக் கிடைத் திருக்காது!" என்று பொன் னுசாமிகிண்டலாகக்கூறினர்.

"இல்லையம்மா, நிறையக் காய்கறிகள் இருந்தன. ஆனு லும், அப்பா சொல்லிக் கொடுத்தபடியே எல்லாவற் றையும் சோதனை செய்து பார்த்தேன். எனக்கு ஒன் றுமே திருப்தியாயிருக்க வில்லை. சேனைக் கிழங்கின் தோலை விரலால் நீக்கிப் பார்த் தேன். அது நகரவேயில்லை. கொஞ்சமாக வாங்கிக் கொள்ளச் சொல்லியிருந்தார், அப்பா. ஆனால், நான் பழைய கிழங்கு வேண்டாமென்றே கூறிவிட்டேன். பலாக்காய் இருந்தது. எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்தேன். எல் லாமே முழுவதும் முள்ளா யிருந்தன. அதுவும் முற்றல் என்று விட்டுவிட்டேன். பக் கத்திலே ஒருத்தன் 'பீன்ஸ்' வைத்துக் கொண்டிருந்தான். 'முற்றலே கிடையாது. வாங்கிக்கொள்' என்றுசொன் னன். நான் ஏன் அவன் சொல்கிறதைநம்பவேண்டும்? அவனுக்கு அப்பா சொன் னதுபோல் உண்மையே பேசத் தெரியாதென்று நினைத்து ஒரு பீன்ஸை எடுத்து நுனியை ஒடித்தேன். நார் நீளமாக இருந்தது. நுனி உடைந்து நாராக இருந்தால் அது முற்றல் என்று அப்பா சொல்லி யிருந்தார். நல்ல வேளையாக அப்போது நினை வுக்கு வந்தது. 'வேண்டா மப்பா' என்று கூறி நகர்ந்து விட்டேன். பீர்க்கங்காயோ என்னவோ சொன்னன். அதை எடுத்து முறுக்கிப் பார்த்தேன். அது கொஞ்ச மும் வளையவில்லை. அதனுல், அதையும் வாங்கவில்லை. பாகற்காயையும் அவனே வைத்துக்கொண் டிருந்தான்.

அவன் கவனிக்காதபடி நுனியைக்கிள்ளி வாயில்போட்டுப் பார்த்தேன். அப்பப்பா! ஒரே கசப்பு! அதை நல்லாயிருக்குமென்று சொல்லி என் தலையில் கட்டப் பார்த்தான். ஹூம்...நானு ஏமாறுகிறவன்? நேரே அடுத்த ஆளிடம் போனேன்...'' என்று கூறிவிட்டு நிமிர்ந்துகூடப் பார்க்காமலேயே தான் வாங்கிவந்த மிளகாயைத் துழாவிக் கொண்டிருந்தான், முனியன்.

பெத்தம்மாள் கணவனைப் பார்க்க அவமானப்பட்டுக் கொண்டு தன் தலையில் அடித்துக் கொண்டாள். பொன்னுசாமி "ஐயோ! முட்டாளே!'' என்று கூறியதையும் முனியன் கவனிக்கவில்லை.

"அப்பா, 'எல்லோரும் பிஞ்சு என்றுதான் பொய் சொல்லித் தலையில் கட்டப் பார்ப்பார்கள்' என்று சொல்லியிருந்தீர்களே; ஆனால், அங்கே ஒரே ஒருவன் உண்மையையே சொல்லி விற்கிறான், அப்பா! 'முற்றல் வாழைக்காய்; நல்லாயிருக்கும். எடுத்துக்கொள்' என்று சொன்னான். 'அவனே முற்றல் என்று சொல்லுகிறானே, அங்கே போகவே வேண்டாம்' என்று நினைத்தேன். ஆனால், அவன் உண்மை பேசி விற்றதாலே அவனிடம் கண்டிப்பாய் ஏதாவது வாங்க வேண்டும் என்று ஒரு வீசை மிளகாய் வாங்கினேன். ...ஐயையோ! அவனிடம் நாலணாவுக்குப் பதில் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு மீதிச் சில்லறையை வாங்க மறந்து வந்துவிட்டேனே! அது இங்கு வந்தபிறகு இப்போதுதான் நினைவுக்கு வருகிறது!'' என்று கூறி முடித்தான்.

பெத்தம்மாளுக்கு முனியனை என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பையைக் கையில் எடுத்துக்கொண்டு, "என்கூட இப்போது மார்க்கெட்டுக்கு வா. மிளகாய்க் கடைக்காரனிடம் முக்கால் ரூபாயை வாங்கிக்கொண்டு, காய்கறிகளையும் வாங்கி வரலாம். இரண்டு மூன்று முறை போய்வந்தால் உனக்கே தெரியும்'' என்று கூறி அவனையும் கூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

உடனே பொன்னுசாமி "ஏன் அவனையும் கூட்டிக் கொண்டுபோகிறாய்? பெரியவனானால் தானாகவே அவனுக்கு எல்லாம் தெரிந்துவிடும்!'' என்று கேலியாகக் கூறியதையும் காதில் வாங்கிக்கொள்ளாதவள்போல் போய்விட்டாள், பெத்தம்மாள்!

●

குள்ளப் பசு

'ரேவதி'

பாலைப் பழிக்கும் வெள்ளை வெளேரென்ற நிறம்; பட்டைவிட மிருதுவான மேனி-இப்படி அந்தப் பசுவை வர்ணித்துக்கொண்டே போகலாம். ஆனால், அதற்குள் கலாவதி குறுக்கிடுகிறாளே!

ஆம், அந்தப் பசு கலாவதியினுடையதுதான்! அவளுடைய 3-வது ஆண்டு நிறைவின்போது அவள் வீட்டிலிருந்த பசுமாடு அதை ஈன்றுவிட்டு இறந்தது.

தாயை இழந்த அந்தக் கன்று கொழு கொழுவென்று வளர்ந்து வந்தது; எல்லாப் பசுக்களையும்விட அது குள்ளமாக இருந்ததால் கலாவதி அதற்குக் 'குள்ளப் பசு' என்று பெயரிட்டாள். 'குள்ளப் பசு'விடம் தன் உயிரையே அடைக்கலப் பொருளாக வைத்து விட்டாள், கலாவதி!

அந்த வாயில்லா ஜீவனும் கலாவதியிடம் என்னதான் கண்டதோ! அவள் கையால் புல்லைப் போட்டால்தான் அது தின்னும். அப்படிப்பழகி விட்டது, அது! என்றாவது கலாவதி தன் கையால் உணவு கொடுக்காவிட்டால் அன்று குள்ளப் பசு ஆகாரமே சாப்பிடாது. கலாவதி அதைத் தன் முகத்தோடு முகம் வைத்துக்கொள்ளும்போது, அதன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகும்.

நாட்கள் நகர்ந்தன. குள்ளப் பசுவின் கழுத்தில் பெயருக்குக் கயிற்றைக் கட்டி வெளியே அழைத்துக் கொண்டுபோக ஆரம்பித்தாள், கலாவதி. அதன்மேல் ஓர் ஈ காக்கைகூட உட்கார அவள் அனுமதிப்பதில்லை. எப்பொழுதும் குள்ளப் பசுவின் உடம்பு பளபளவென்று தூய்மையாக, சுத்தமாகக் காட்சியளிக்கும்.

ஒருநாள், கலாவதி குள்ளப் பசுவுடன் ஆற்றங்கரைக்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்தாள். எதிரே...

வெறி பிடித்த சொறி நாய் ஒன்று கோரப் பற்களடங்கிய தன் வாயைத் திறந்து கொண்டே கலாவதியைக் கடிக்க ஓடிவந்துகொண்டிருந்தது. கலாவதி இதைக் கவனிக்கவில்லை. ஆனால், குள்ளப் பசுவின் கண்கள் இதைக் கண்டுவிட்டன! உடனே, அது கலாவதியின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு, வாலை நிமிர்த்தியபடி நாயை நோக்கிப் பாய்ந்தது. அதற்குள் நாய் பலமாகக் குள்ளப்பசுவின் காலைப் பார்த்துக் கடித்து விட்டது! அதே சமயம், எவனோ எறிந்த கல் நாயை நோக்கிப் பறந்து வந்தது. ஆனால்...

நாய் நகர்ந்து கொண்டது. குள்ளப் பசுவின் காலை—நாய் கடித்த காலை வேகமாகப் பறந்து வந்த கல் தாக்கியது! இரத்தம் கொட கொட என்று குள்ளப் பசுவின் காலிலிருந்து கொட்ட ஆரம்பித்தது. உடனே, நாய் பலமாகக் குரைத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டது.

அன்றிலிருந்து குள்ளப் பசு நொண்டிப் பசுவாகியது. ஊரிலிருப்பவர்கள் அனைவரின் கவனத்தையும் ஒருங்கே கவர்ந்த குள்ளப்பசு, இப்போது நொண்டிப் பசுவாகி விட்டது! கலாவதி ஒருமாதம் வரை பைத்தியம் பிடித்தவள் போலவே காட்சியளித்தாள். தன்னை நாயிடமிருந்து காப்பாற்றவே அது ஓடியது என்று எண்ண எண்ண அவள் நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருந்தது. மிருக வைத்தியர் அளித்த மருந்தைக் காயத்தில் வைத்துக் கட்டினாள். அதற்கு வேண்டிய சிகிச்சைகளையெல்லாம் தானே அருகிலிருந்து செய்து வந்தாள்.

ஒருநாள் இரவு, கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தாள், கலாவதி. வழியில் மூன்றுபேர் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் கலாவதியின் தந்தை. மற்றொருவன் மாடு விற்கும் தரகன். மூன்றாவது மனிதர் அவ்வூரிலுள்ள

பிரபல செருப்புக் கடை வியாபாரி. மூவரும் ஏதோ பேசிக்கொண் டிருந்தனர். ஆனால், கலா அதையெல்லாம் கவனிக்கவில்லை. இரவு சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டாள். தூக்கம் வரவில்லை.

நடுநிசி. கலா புரண்டுபடுத்தாள்.

"அம்மா.....அ.....அம்.....மா—!" குள்ளப் பசுவின் தீனக் குரல் கேட்டது.

தன் கன்றின் குரலை அறியாத பசுவும், சேயின் குரலை அறியாத தாயும் உண்டா? கலா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். அந்த தீனக் குரலில் என்னென்ன வார்த்தைகள் இருக்கின்றன என்று அவளுக்கே தெரியாது! அந்தக் குரல் "ஐயோ கலா, எனக்கு அபாயம்! உடனே வா" என்று கூறுவது போலவே தோன்றியது.

"அப்பா, அ...ப்...பா" என்று கத்திய கலாவின் கண்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தன. அப்பாவைப் படுக்கையில் காணவில்லை. மறு நிமிஷம் மாட்டுக்கொட்டிலை நோக்கி ஓடினாள். அங்கே மனித நடமாட்டம் தெரிந்தது. மூன்று ஆட்கள் நின்றுகொண் டிருந்தனர். ஒருவர் கலாவின் தந்தை; மற்ற இருவரும் செருப்புக் கடையில் வேலை செய்து வரும் ஆட்கள். அவர்களைப் பார்க்கவே மனம் நடுங்கியது. பயங்கரமாகக் காணப்பட்டனர். குள்ளப் பசுவை முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டிருந்தனர், அவ்விருவரும்.

ஏற்கனவே, உபயோகமில்லாத பசுக்களையும், எருதுகளையும் செருப்புத் தைப்பவர்களிடம் விலைக்குக் கொடுத்து விடுவார்கள் என்றும்,

அவர்கள் அவற்றைக் கொன்று செருப்புத் தைக்க உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்றும் கலா எவ்வளவோ முறை கேள்விப் பட்டிருக்கிறாள். அது நினைவுக்கு வந்ததும், "ஐயோ, என் குள்ளப் பசு!" என்று அலறியபடியே குள்ளப் பசுவின் அருகிலே ஓடி, அதன் கழுத்தை இறுக அணைத்துக் கொண்டாள். குள்ளப் பசுவின் கண்களிலிருந்து நீர் பெருகியது.

இந்தக் காட்சியைக் கண்ட அப்பாவின் கண்களிலும் நீர் நிறைந்தது. "அன்பால் ஒன்றுபட்ட இரு உயிர்களைப் பிரிக்க நினைத்தாயே!" என்று அவரது மனச்சாட்சி உறுத்தியது. அவர் தம் செயலுக்காகத் தலைகுனிந்து நின்றார்.

"கலா, பயப்படாதே! உன் குள்ளப் பசுவை ஒன்றும் செய்யமாட்டேன். அதற்கும் உனக்கும் இடையே உள்ள அன்பை இப்பொழுதுதான் உணர்ந்தேன்" என்று தடுமாற்றத்துடன் கூறினார், அப்பா.

* * *

செருப்புக்கடைக்காரருக்கு ஓரே கோபம். அவருக்கு வெகு நாட்களாகவே குள்ளப் பசுவின்மேல் ஒரு கண். அது உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தது. அதனால் அதை எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்று எண்ணினார். சமயத்தை எதிர்நோக்கியபடி உட்கார்ந்து கொண்டிருந்

199249

தார். அவர் எதிர்பார்த்த படியே நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. குள்ளப் பசு நொண்டியாகிவிட்ட செய்தி அவருக்குத் தெரிந்தது. அவ் வளவுதான்; தினமும் கலா வின் தந்தையிடம் சென்று, அவர் மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி விட் டார்.

அந்தக் குள்ளப் பசுவுக்கு இனிமேல் கால் சரியாகாது என்றும், அதனுல் செலவு தான் உண்டாகும் என்றும் போதனை செய்தார். முதலில் கலாவின் தந்தை இதை நம்ப வில்லை. பிறகுதான்-ஒரு மாத மாகியும் குள்ளப்பசு குண மடையாததைக் கவனித்த தும்தான் அவருடைய மனம் மாற ஆரம்பித்தது. கடைசி யில், செருப்புக் கடைக்காரன் குள்ளப்பசுவைப் பிடித்துவர ஆட்களை அனுப்பினுன். ஆனுல், அவன் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது! கலா தான் தடுத்து விட்டாளே! புலிவஞ்சம் தீர்த்துக்கொள்ள சமயத்தை நோக்கி யிருக்கு மல்லவா? அது போல செருப் புக் கடைக்காரன் இன்னெரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

* * *

இரண்டு மாதங்கள் மறைந் தன. கொழு, கொழுவென்று புஷ்டியுடன் விளங்கிய குள் ளப் பசு எலும்புக் கூடாகக் காட்சி அளித்தது. அது துள்ளி விளையாடுவதைவிட்டு மூன்று மாதங்களாகின்றன. கலாவும், அப்பாவும் இராப் பகலாக அதன் அருகில் இருந்து மருந்துகள் கொடுத் தனர். ஆனுல், நாளுக்கு நாள் குள்ளப் பசுவின் உடம்பு மோசமாகிக்கொண்டே வந் தது.

அன்று மாலை குள்ளப் பசு வின் நிலைமை மிகவும் மோச மாக இருந்தது. கலாவுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. அழுதுகொண்டிருந் தாள். அப்பொழுது...

இரைக்க இரைக்க, மேல் மூச்சு வாங்க ஓடிவந்தார், மாட்டு வைத்தியர். அவர்தான் குள்ளப் பசுவுக்கு மருந்து கொடுத்து வந்தார். ஓடிவந்த அவர், நேராக அப்பாவிடம் சென்று காலடியில்விழுந்தார். தம்மை மன்னித்துவிட வேண் டும் என்றும் கெஞ்சிக்கேட்டுக் கொண்டார். அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு வைத்தியரே விஷயத்தை விளக்கினுர்:

"ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். அந்தச் செருப்புக் கடைக்காரன் வெகு நாளா கவே இந்தக் குள்ளப்பசுவின் தோலினுல் செருப்புத் தைக்க விரும்பினுனம். அன்று ஒரு

நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாம். ஆனாலும், நீங்கள் உங்கள் மகள் பேச்சைக் கேட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டீர்களாம். பிறகு,எப்படியாவது இந்தப் பசுவைக் கொன்றுவிட வேண்டும் என்று அவன் நினைத்தானாம். செத்த பிறகு அவனிடம் தானே அதைக் கொடுப்பீர்கள்! அந்த எண்ணத்தில் தான் அவன் என்னிடம் வந்தான். மருந்து கொடுக்கும் போது கொஞ்சம் விஷத்தையும் கலந்து கொடுக்கச் சொன்னான். அதற்காகப் பணம் கூடத் தருவதாகச் சொன்னான்.

"பண ஆசை பிடித்த நானும் அவன் சொன்னபடி கொஞ்சம் கொஞ்சமாக மருந்துடன் விஷத்தைக் கலந்து கொடுத்துவந்தேன். ஆனால், இன்று காலை உங்கள் மகளும் நாளுக்குநாள் இளைத்து வருவதையும், அவளின் பரிதாப நிலையையும் கண்டு என் இரக்கமற்ற மனம் இளகியது. வீடு சென்றதும் யோசித்துப் பார்த்தேன்.நான் செய்து வரும் துரோகச் செயலை உணர்ந்தேன்.ஓர் உயிரைக்கொல்வது வெகுசுலபம்; ஆனால், அதற்குத் திரும்பவும் உயிர் கொடுக்க எவராலும் முடிவதில்லை. உங்கள் மகளின் பரிதாப முகம் அடிக்கடி என் கண்முன் தோன்றி, என் துரோகச் செயலை ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தது. இனியும் விஷயத்தை ஒளித்துவைக்கவிரும்பவில்லை. ...ஆனால், ஒன்று. நீங்கள் இனிக் கவலைப்பட வேண்டாம். இதோ ஒரு மாற்று மருந்து கொண்டு வந்திருக்கிறேன்.இதைக்கொடுக்கிறேன். நாளைக் காலைக்குள் விஷமெல்லாம் வெளியாகிவிடும். பசுவைக் காப்பாற்றி முன்பு இருந்த நிலைக்குக்கொண்டுவர வேண்டியது என் பொறுப்பு. நிச்சயமாக என்னை நம்புங்கள்; சத்தியமாக நம்புங்கள்" என்று மூச்சு விடாமல் கூறி முடித்தார், மாட்டுவைத்தியர்.

"சண்டாளப்பாவி;செருப்பு வியாபாரி!" என்று முணுமுணுத்தார், கலாவதியின் அப்பா.

"சரிஐயா,போனதுபோகட்டும். உடனே மருந்தைக் கொடுத்து என்பசுவைக் காப்பாற்றுங்கள்" என்று துடித்தாள் கலாவதி.

வைத்தியர் புது மருந்தைக் கொடுத்தார். மறுநாள் முதல், குள்ளப்பசு குணமடைந்து வந்தது.

இப்போது, குள்ளப் பசு, நல்ல குண்டுப் பசுவாகக் காட்சியளித்துவருகிறது.கலாவதியின் உடம்பும்சிறிதுகனத்திருப்பதுபோல் தெரிகிறது!

என் தெய்வம்

அழகரசன்

அருளானந்தர் அனாதை ஆசிரமத்தில், இடைவேளைக்குப் பிறகு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. மாணவர்களாகிய அனாதைச் சிறுவர், சிறுமியர் 'திமு திமு' வென்று அறைக்குள் நுழைந்தார்கள். சிறிது நேரத்தில் ஆசிரியர் வந்து உட்கார்ந்தார். அவருக்கு சுமார் இருபது வயது இருக்கும். அவரே தான் ஆசிரமத்தை நடத்துபவரும். வந்து உட்கார்ந்ததும், பாடத்தைத் தொடங்கினார்.

"இப்போது, மகாத்மா காந்தி எழுதிய 'மாணவர்களுக்கு சில அறிவுரைகள்' என்ற பாடத்தை நடத்தப் போகிறேன்" என்று தெரிவித்துவிட்டு ஒரு மாணவனைப் படிக்கச் சொன்னார்.

மாணவன் 'கிடு கிடு' வென்று படித்துக்கொண்டு சென்றான். ஆசிரியர் கடினமான இடங்களில் விளக்கி வந்தார். புத்தகத்தில் ஓரிடம் வந்தது. "மாணவர்களாகிய நீங்கள் சிறு வயதிலேயே பீடி, சிகரெட் போன்ற கெடுதலான வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது" என்று புத்தகத்திலிருந்ததைப் படித்தான், அந்த மாணவன்.

ஆசிரியர் சிறிது திடுக்கிட்டார். அவர் உடம்பு புல்லரித்தது. அந்த வாக்கியம் அவரை எங்கேயோ இழுத்துச் சென்றது. அதற்குமேல் அவரால் விளக்கம்கூற முடியவில்லை. சிறிது நேரத்தில் அவருடைய கண்களின் ஓரத்தில் கண்ணீர் அரும்பி நின்றது.

இவைகளையெல்லாம் பார்த்த மாணவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர். அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது.

ஒரு மாணவன் எழுந்தான்.

"ஏனப்பா அழுகிறீர்கள்?" என்று கேட்டான். ஆசிரியர் தலைநிமிர்ந்து பார்த்தார். அந்த அனாதைச் சிறுவர்களுக்கு அவரேதான் தாயும், தகப்பனும். ஆகையால், மாணவர்கள் அவரை 'அப்பா' என்றுதான் அழைப்பது வழக்கம். நிமிர்ந்து பார்த்த ஆசிரியர், கண்களில் நீர்வழியப் பேசலானார்:

"என் அருமைக் குழந்தைகளே! அந்த வாக்கியத்தைப் படித்ததும் எனக்குப் பழைய நினைவுகளெல்லாம் வந்துவிட்டன. நானும் சிறு வயதில் உங்களைப் போலவே ஓர் அனாதைதான்" என்றதும், மாணவர்கள் "அப்படியா, அப்பா!" என்று ஆச்சரியப்பட்டனர்.

அவர் சொன்னார்: "ஆமாம், என்னுடைய தாயும், தந்தையும் நான் ஐந்தாவது வயதை அடைவதற்குள் ஒருவர் பின் ஒருவராக என்னைத் தனியே தவிக்கவிட்டுச் சென்றுவிட்டனர். அந்தப்பருவத்தில் எனக்கு, "எங்கே செல்வது? என்ன செய்வது?" என்றே தெரியவில்லை. பசியின் கொடுமையால் தெருத் தெருவாகச் சென்று கண்டவரையெல்லாம் காசு கேட்க ஆரம்பித்தேன். இதைக் கண்ட என் பக்கத்து வீட்டுக்காரர் என்னைக் கூலி வேலை செய்து பிழைக்கச் சொன்னார். சிறுவனான நான் என்ன கூலி வேலை செய்யமுடியும்? நாட்கள் நத்தைபோல் நகர்ந்தன.

நானும் அறியாப் பருவத்தைக் கடந்தேன். அதுவரை பிச்சை எடுத்தே காலங் கழித்த நான், பிறகுதான் மானத்திற்குப் பயந்து கூலி வேலை செய்ய ஆரம்பித்தேன். 'பஸ்' நிற்கும் இடத்திற்குச் சென்று மூட்டை சுமக்கலானேன்; நாளாக ஆக, அதுவே என் இருப்பிடமாயிற்று. பல 'மூட்டை தூக்கும் நண்பர்கள்' எனக்குப் பழக்கமானார்கள். அந்த நண்பர்கள் அடிக்கடி பீடி, சிகரெட் பிடிப்பதைக் கண்டு நானும் பீடி பிடிக்க ஆரம்பித்தேன். எழுத்து வாசனையும், உலக அனுபவமும் இல்லாத நான் அதனால் உண்டாகும் தீமைகளை அப்பொழுது அறியவில்லை. நாள் ஆக ஆக, அது எனக்கு உணவைவிட மிகவும் முக்கியமானதாகி விட்டது. சுமார் இரண்டாண்டுகள் இலவம்பஞ்சுபோல் பறந்தன.

ஒருநாள்—அதுதான் என் வாழ்வு மலர ஆரம்பிக்கும் நாள் என்று எனக்கு அப்பொழுது தெரியாது. அன்று மாலை மணி நான்கு இருக்கும். 'பஸ் ஸ்டாண்'டில் நின்றுகொண்டு பீடி பிடித்துக்

கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு 'பஸ்' வந்து நின்றது. நான் கூலி பிடிக்கப் போவதற்காக அவசர அவசரமாகக் கையிலிருந்த பீடியை இழுத்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் ஒரு பெரியவர் என்னருகில் வந்தார். அவர் கையில் மூட்டை ஒன்று இருந்தது. அப்பொழுதுதான் அந்த 'பஸ்'ஸிலிருந்து இறங்கி வந்தார் போலிருந்தது.

அவர், "என்னப்பா! இந்த மூட்டையைச் சுமந்து வருகிருயா? உனக்குத் தகுந்த ஊதியம் தருகிறேன்" என்று தூய தமிழில் கேட்டார்.

கையிலிருந்த பீடியை எறிந்துவிட்டு, "தூக்கிக் கொண்டு வருகிறேன், தாத்தா" என்று சொல்லி மூட்டையை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டேன், நான். பெரியவர் முன்னல் நடக்க நான் அவரைப் பின் தொடர்ந்து சென்றேன்.

தடியை ஊன்றித் தள்ளாடிப் போய்க் கொண்டிருந்த பெரியவர் திடீரென்று, "ஏன் தம்பி, இந்தச் சிறு வயதில் பீடி பிடிக்கலாமா? உன்னைப் பார்த்தால் பத்து வயதுகூட இருக்காது போல் தோன்றுகிறதே!" என்று கேட்டார். அவருடைய கேள்வி என் மனத்தைச் சஞ்சலப் படுத்தி

யது. என் மேல் இரக்கப்பட்டு யாரும் இதுவரை என்னை இப்படிக் கேட்டதில்லை.

"இல்லை... தாத்தா... வந்து ... வந்து ... அது எனக்குப் ... பழக்கமாகிவிட்டது" என்று தட்டுத் தடுமாறிக் கூறினேன்.

உடனே அந்தப் பெரியவர், "அது கெட்ட பழக்கமல்லவா!" என்று கூறிவிட்டு, "உனக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. "இல்லை தாத்தா" என்றேன். அதற்குமேல் கூறமுடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"ஐயோ, பாவம்! கட்டுப்பாடு இல்லாததால்தான் கெட்ட பழக்கங்கள் உன்னைச் சூழ்கின்றன" என்று சொல்லிக்கொண்டே நடந்தார், அவர்.

சிறிது நேரத்தில் ஒரு சிறிய வீடு வந்தது. அவர் அதனுள்ளே சென்றார். நானும் அவரைத் தொடர்ந்து உள்ளே சென்று மூட்டையைக் கூடத்தில் இறக்கிவைத்தேன். அவர் கூலி கொடுப்பதற்காகப் பணத்தை எடுத்து என் முன்னே நீட்டினார். அப்பொழுது அவர் என்னுடைய முகத்தைப் பரிதாபம் நிறைந்த பார்வையோடு பார்த்தார். அவருக்கு என்ன தோன்றியதோ, உடனே எடுத்த பணத்தைப் பையில் போட்டுக்கொண்டு, "தம்பி! மீண்டும் இந்த மாதிரிக் கெட்ட பழக்கங்களில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை. நீ என்னுடனேயே இருந்து விடுகிறாயா?" என்று கேட்டார்.

நான் அவருடைய பேச்சைக் கேட்டு மலைத்து நின்றுவிட்டேன். இதுவரை என்னிடம் யாருமே இரக்கம் காட்டியதில்லை. அவர்களின் மத்தியில் இப்படிப்பட்ட தெய்வம் போன்ற ஒரு மனித



"தாத்தா, உன்னைவிட நான்தான் பெரியவன்!"

"அதெப்படியடா கண்ணு?"

"நீ 80-வது வயதில்தானே இவ்வளவு பெரிய புயலைப் பார்த்தாய்? நான் என் 8-வது வயதிலேயே பார்த்து விட்டேனே! அதனால்தான்...."

—A. பாப்பா

சித்ரபுத்திரன்: எமதர்ம ராஜரே, இவன் ஒரு பால் வியாபாரி. ஒரு படி பாலை நாலு படியாக்கி மக்களை ஏமாற்றிய படுபாவி.

எமதர்மன்: அப்படியா? சரி, இவனைக் கொதிக்கும் நீரில் தள்ளுங்கள்.

பால் வியாபாரி: வேண்டாம்! வேண்டாம்! கொதிக்கும் நீர் வேண்டாம்! நான் குளிர்ந்த நீரில்தான் பாலைக் கலந்து விற்றேன். என்மேல் குளிர்ந்த நீரையே ஊற்றச் சொல்லுங்கள், பிரபோ.

—ந. முருகன்

ரும் இருக்கத்தானே செய்கிறார் என்று வியந்துகொண்டே பேசாமல் நின்றிருந்தேன்.

அவர் மீண்டும், "என்னப்பா, இருக்கிறாயா? உணவு, உடை எல்லாவற்றையும் கொடுப்பதோடு உனக்குத் தேவையான அறிவையும் கொடுக்கிறேன்" என்றார்.

'சரி' என்பதற்கு அடையாளமாக நான் தலையை மட்டும் அசைத்தேன். என் கண்கள் கண்ணீரைச் சிந்தின. அது ஆனந்தக் கண்ணீர்!

அன்றிலிருந்து என் வாழ்க்கை மலர் இதழ் இதழாக மலர்ந்து வரலாயிற்று.

அவர் பெயர் அருளானந்தர். பெரிய தமிழ் வித்துவானாக இருந்து ஓய்வெடுத்துக்கொண்டவர். ஆகையால், அவர் எனக்குத் தினமும் பாடமும், நீதிகளும் கற்பித்து வந்தார். பீடி பிடிப்பதனால் உண்டாகும் தீமைகளைத் தெள்ளத் தெளிய விளக்கினார். அந்தக் கெட்ட பழக்கங்களெல்லாம் சிறிது சிறிதாக என்னைவிட்டு அகன்றன. அவரிடமிருந்த நல்ல குணங்களும், அவருடைய அறிவுரைகளுமே என்னைத் தூயவனாக்கின.

காலச்சக்கரம் கடுகி விரைந்தது. நானும் தமிழ் வித்துவான் பரீட்சையில் தேறித் தமிழாசிரியர் ஆனேன். அவருடனே இருந்து ஆசிரியர் வேலை பார்த்து வந்தேன். ஒரு தடவை என்னை வேறு ஊருக்கு மாற்றினர். சுமார் எட்டு வருடங்களாக உடனிருந்த அருளானந்தரை அப்பொழுதுதான் பிரிய நேரிட்டது. போகும்பொழுது நான் அவருடைய காலைப் பிடித்துக்கொண்டு அழுதேன். அவர், "ராமலிங்கம்! அழாதே! சந்தோஷமாகப்

போய்வா! நீ நல்லவனாகத் திருந்தியதே எனக்குப் போதுமான திருப்தியை அளிக்கும்'' என்று சொன்னார். நானும் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றேன்.

ஆறு மாதங்கள் அகன்றன. ஒருநாள் தந்தி ஒன்று வந்தது. அதில், "அருளானந்தர் மரணம். உடனே வரவும்'' என்றிருந்தது. அதைப் படித்தவுடன் என் தலை சுழன்றது! என்னை மனிதனாக்கிய தெய்வம் மறைந்துவிட்டது என்பதை நினைக்க நினைக்க என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. பறந்து சென்றேன். அங்கே என் இதய தெய்வத்தின் உயிரற்ற உடலைக் கண்டேன்; கண்ணீர் விட்டுக் கதறி அழுதேன். சுற்றிலுமிருந்தவர்கள் சமாதானம் கூறினார்கள். ஆனால், அவர்களுக்குத் தெரியுமா, அவர்தான் என்னைப் பகுத்தறிவுள்ள மனிதனாக்கிப் பாதுகாத்தவர் என்பது? என்னுடைய இதயத்தையே கண்ணீராக்கி அழுதேன். அதைச் சொல்லி என்ன பயன்?

பிறகு அந்த வீட்டிலேயே பித்துப் பிடித்தவன் போல் சில நாட்கள் இருந்தேன். கடைசியில், அவருக்கு ஞாபகார்த்தமாக ஏதாவது ஒன்றை ஏற்படுத்தாவிட்டால் நான் நன்றியுள்ளவன் ஆக மாட்டேன் என்று எண்ணினேன். கையிலிருந்த சிறு தொகையுடன், பல பணக்காரர்களின் ஆதரவும், அரசாங்கத்தாரின் ஆதரவும் பெற்று இந்த 'அருளானந்தர் அனாதை ஆசிரம'த்தை ஏற்படுத்தினேன்; இதன் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் அளித்து வருகிறேன்.

குழந்தைகளே! இப்பொழுது தெரிந்து கொண்டீர்களா, என்னுடைய கதையையும், நான் அழுத காரணத்தையும்?'' என்று கேள்வியில் கொண்டுவந்து நிறுத்தினார், ஆசிரியர்.

எல்லாக் குழந்தைகளும், "அந்தத் தாத்தா இப்பொழுது இருந்தால் எப்படியப்பா இருக்கும்?'' என்று வியப்புடன் கேட்டனர்.

உடனே ஒரு சிறுவன், "அந்தத் தாத்தா இருந்தால், இதைப்போல் அனாதைப் பள்ளிக்கூடங்கள் ஆயிரமாயிரமாக ஏற்பட்டிருக்கும்!'' என்று பதிலளித்தான்.

ஆசிரியர் சிறுவர்களின் மனப்போக்கை எண்ணி எண்ணி இன்பத்தில் ஆழ்ந்தார். அவர் வாழ்க்கையிலேயே அருளானந்தர் ஒரு மறையாத ஜோதியாக விளங்கி வந்தார். ○

சுதாகருடன் ஒரு மணி!

[குழந்தைகளுக்கென்றே தனியாக ஒரு படம் எடுப்பதாக இருந்தால், அப்போது பால்ய நடிகர் சுதாகரை மறக்கவே முடியாது. அந்தப் படத்தில் முக்கியமான ஒரு பாகத்தை நிச்சயம் அவனுக்குக் கொடுத்துத்தானாகவேண்டும். அவ்வளவு அற்புதமாக, பார்ப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் முறையில் பல படங்களில் நடித்திருக்கிறான், சுதாகர். சுதாகரை நேரில் கண்டு பேசிய நமது பிரதிநிதி **ஸ்ரீ. வி. கல்யாணகிருஷ்ணன்** சுதாகரைப்பற்றிச் சுவைபடக் கூறுகிறார்; படியுங்கள்.

—ஆசிரியர்]

கேள்வி: ஏன் தம்பி, முதல் முதலில் சினிமாவில் நடிக்கும்போது உனக்குக் கூச்சமாக இல்லை?

பதில்: கூச்சமா? நான் தான் ஏற்கனவே எத்தனையோ மேடைகளில் நடித்திருக்கிறேனே! மேடைகளில் நடிக்கும் போதாவது ஆயிரக் கணக்கானவர்கள் சுற்றிலும் இருந்து பார்ப்பார்கள். சினிமா எடுக்கும்போது, அவ்வளவு பேரா இருக்கிறார்கள்? சும்மா பத்துப் பதினைந்து பேர்தான் இருப்பார்கள்.......

கேள்வி: அடடே, அதைப் பற்றிக் கேட்கவில்லை, தம்பி. சினிமா எடுக்கும்போது, ஸ்டுடியோவில் உன்னைச் சுற்றிலும் மிக மிகப் பிரகாசமான விளக்குகள் இருந்திருக்குமே, அவைகளுக்கு மத்தியில் நடிப்பதென்றால் கண்கள் கூசுமே, அதைத்தான் கேட்டேன்.

பதில்: ஓ, அதுவா!...... ஆமாம், முதலில் எனக்கு

ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும், எனக்குப் பல மேடைகளில் நடனம் ஆடி, ஆடிப் பழக்கம் ஏற்பட்டிருந்ததால், சிறிது நேரத்தில் சமாளித்துக் கொண்டு விட்டேன்.

கேள்வி: என்ன! உனக்கு நடனம் ஆடக்கூடத் தெரியுமா? அதை யார் உனக்குக் கற்றுக் கொடுத்தது?

பதில்: என் 5-வது வயதிலிருந்தே நான் நடனம் ஆடுவதுண்டு. என் அப்பா ஆந்திர தேசத்தில் மிகப் பிரபலமான ஓர் ஹார்மோனிய வித்துவான். அவர்தான் எனக்கு நடனம் ஆடவும், பாட்டுப் பாடவும் கற்றுக் கொடுத்தார்.

கேள்வி: நீ எப்பொழுதாவது நாடகத்தில் நடித்ததுண்டா?

பதில்: நாடகத்தில் நடனம் ஆடியிருக்கிறேன். 'ஈ ராத்திரி' (இந்த இரவு) என்ற தெலுங்கு நாடகத்தில் என்னை நடனம் ஆடச் சொன்னார்கள். அந்த நாடகம்தான் என்னை சினிமா உலகிற்குக் கொண்டுவந்து சேர்த்தது.

கேள்வி; அது எப்படி!

பதில்: 1949-ம் வருஷம் காகிநாடாவில் கலாபரிஷத் என்று ஒரு கலை விழா நடைபெற்றது. அப்போது நடந்த 'ஈ ராத்திரி' என்ற நாடகத்தில்தான் நான் நடனம் ஆடினேன். அந்த விழாவிற்குப்

பல பெரிய பெரிய கலைஞர் களெல்லாம் வந்திருந்தார்கள். புகழ்பெற்ற வட இந்திய நடிகர் பிருதிவி ராஜ்கூட வந்திருந்தார். பினி செட்டி என்பவர் ஒரு பிரபல ஆந்திர கவி. அவரும் அந்த விழா வுக்கு வந்திருந்தார். அவருக்கு என் நடனம் மிகவும் பிடித் திருந்தது போலிருக்கிறது.

இந்தவிழா நடந்த கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, அவர் சென்னைக்கு வந்திருக்கிறார். அப்போது, டைரக்டர் பிர காஷ்ராவை சந்தித்தாராம். அப்போது பிரகாஷ்ராவ், தாம் ஒரு படம் எடுக்கப் போவ தாகவும், அதற்குத் தகுதி யான சில சிறுவர்கள் தேவை யென்றும் கூறினாராம். உடனே பினி செட்டி, என் விலாசத்தை அவரிடம் கொடுத்தாராம். சில நாட் களுக்குப் பிறகு, சென்னைக்கு வரும்படியாக பிரகாஷ்ரா விடமிருந்து எனக்கு ஒரு முக் காலணு 'கார்டு' வந்தது. அதைப் பார்த்ததும் நான் மட்டுமல்ல ; எங்கள் வீட்டி லுள்ள எல்லோருமே ஆச்சரி யப் பட்டுவிட்டனர்.

'ஒரு பெரிய சினிமாக் கம் பெனிக்காரர் நமக்கு எழுதி யிருக்கிறாரே!' என்று கூட ஆச்சரியப்படவில்லை ; 'ஒரு பெரிய சினிமாக் கம்பெனிக் காரர் முக்காலணுக் கார்டில் இப்படி அழைத்திருக்கிறாரே' என்றுதான் ஆச்சரியப்பட் டோம். முதலில், சென்னைக்கு வரச் சற்று தயங்கினோம். இருந்தாலும், நல்ல சமயத்தை நழுவவிடக் கூடாதென்று தீர் மானித்தோம். ஒரு மாதம் கழித்துச் சென்னை மாநகரை அடைந்தோம். டைரக்டர் பிரகாஷ்ராவைப் பார்த்தோம். அவர் முதல் முதலில் என்னை நடனம் ஆடச் சொன்னார்; ஆடினேன். பிறகு, டைரக்டர் பிரகாஷ்ராவும், அவரது நட் சத்திர மனைவி ஜி. வரலட் சுமியும் எனக்கு நடிப்புக் கலை யைக் கொஞ்சம் கொஞ்சமா கச் சொல்லிக்கொடுத்து, இப் போது என்னை இந்த நிலை மைக்குக் கொண்டுவந்திருக் கிறார்கள்.

'மேலே கண்ட கேள்வியும் பதிலும் யார் யாருக்கு நடந் தது? யார் கேள்வி கேட்டது; யார் பதில் சொன்னது?' என்றுதானே கேட்கிறீர்கள்?

தேனாம்பேட்டையில் உள்ள ஒரு சிறிய வீட்டிலே தென்னிந்திய சினிமா வானில் குட்டி நட்சத்திரமாக விளங் கும் மாஸ்டர் சுதாகருக்கும், 'பூஞ்சோலை'யின் பிரதிநிதி யாகச் சென்ற எனக்கும் நடந்த சம்பாஷணையின் ஒரு பகுதியைத்தான் இதுவரை படித்தீர்கள். இன்னும், நாங் கள் நடத்திய சம்பாஷணைகளை

யெல்லாம் கேள்வி—பதிலாகப் போடுவதென்றால், ஒரு 'பூஞ்சோலை' இதழே சரியாகி விடும்! ஆகையால், சுருக்கமாகக் கூறுகிறேன்; கேளுங்கள்.

காகினாடா என்பது ஆந்திராவில் உள்ள ஒரு நகரம். அந்த நகரில்தான் சுதாகர் பிறந்தான். 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதிதான் அவன் பிறந்த நாள். அவனுடைய அப்பா பெயர் எம். சாம்பமூர்த்தி. அம்மா பெயர் சுந்தரமணி அம்மையார். சுதாகரின் குடும்பம் மிகவும் சாதாரணமான ஒரு குடும்பமே.

சுதாகர் சிறு குழந்தையாக இருந்தபோதே வெகு விஷமக்காரனாகவும், துடுக்குள்ளவனாகவும் இருந்தான். அவனுடைய விஷமத்தனத்தையும், துடுக்குத்தனத்தையும் உபயோகமான வழியில் திருப்ப நினைத்தார், அவன் அப்பா. ஐந்து வயதிலிருந்தே சுதாகருக்குப் பாட்டுப் பாடவும், நடனம் ஆடவும் கற்றுக் கொடுக்கலானார். சுதாகரும் ஆர்வமுடன் அவற்றைக் கற்றுக் கொண்டான். ஆந்திர தேசத்தில் பல இடங்களில் அவன் நடனமாடிப் புகழும், செல்வமும் பெற்றான்.

அவன் அப்பாவும் தம்முடைய மனைவி பெயரில் 'சுந்தரமணி நாடக மண்டலி' என்ற ஒரு சபையை நடத்தி வந்தார். அதிலும் சுதாகர் நடனமாடிவந்தான். கடைசியாக, கலா பரிஷத் விழாவில் நடனமாடிய போதுதான், அவனை பினி செட்டி கண்டார். அவர் முயற்சியால் அவன் சினிமா உலகில் நுழைந்தான்; பிரகாஷ்

ராவின் உதவியால், அவன் பிரபல நடிகன் ஆனான்.

சுதாகர் சினிமாவில் சேருவதற்கு முன் இரண்டாவது 'பாரம்' 'பாஸ்' செய்திருந்தான். அவன் பிரகாஷ் ராவிடம் வந்ததும், பிரகாஷ் ராவ் அவனைத் தம்முடைய வீட்டிலேயே வைத்துக் கொண்டு நடிப்புக் கலையைக் கற்றுக் கொடுத்தார். 'அண்ணி' படம்தான் அவன் முதல் முதலாக நடித்த படம்.

"அப்போது வரலட்சுமி அம்மாள் எனக்கு சினிமாவில் மட்டும் தாயாக இருக்கவில்லை; வீட்டில்கூடத் தாயாகவேவிளங்கிவந்தாள்!" என்று சுதாகர் மிகவும் பெருமிதத்துடன் கூறினான். அத்துடன் விடவில்லை.

'நான் இவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணம் பிரகாஷ் ராவும், வரலட்சுமி அம்மையாரும் தான்' என்று அவன் அடிக்கடி கூறினான். நான் அவனுடன் பேசிக் கொண்டிருந்த சுமார் 2½ மணி நேரத்துக்குள், சுமார் 10, 15 தடவைகளாவது இதைக் கூறியிருப்பான்! அப்படி அவன் கூறியது இப்போது கூட என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

சுதாகர் 'அண்ணி'யில் நடித்துக் கொண்டிருக்கும் போதே ஜெமினியிலிருந்து 'மூன்று பிள்ளைகள்' படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அந்தப் படத்தில் கடைசிப் பிள்ளை கண்ணனாக நடித்து எல்லோர் உள்ளத்தையும் உருகச் செய்து விட்டான், சுதாகர். அண்ணனுக்காக அவன் அடி வாங்குவதையும், அம்மாவின் உயிரைக் காக்க அவன், தன் உயிரையும் மதியாமல் கார் வண்டிகளுக்கு நடுவே புகுந்து வேக வேகமாக ஓடி ஆஸ்பத்திரியை அடைவதையும், டாக்டரின் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிப் பேசி அவரை அழைத்து வருவதையும் நாம் மறக்கவேமுடியாது!

ஜெமினியில் நுழைந்தவுடனேயே, 'சௌதாமினி' படத்தில் நடிக்க ஒரு 'சான்ஸ்' கிடைத்தது. பிறகு, 'வேலைக்காரன்', 'என் வீடு', 'வளையாபதி', 'தேவதாஸி', 'மருமகள்' முதலிய படங்களிலெல்லாம் நடித்திருக்கிறான். இன்னும், 'செல்லப்பிள்ளை', 'இன்ஸ்பெக்டர்', 'பெற்றமனம்', 'ரத்த பாசம்', 'பூமாலை', 'லேகசி', 'மேலகொலுபு' முதலிய படங்களிலும், பிரகாஷ்ராவின் மற்றொரு படமான 'பெற்றதாய்' என்ற படத்திலும் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து சில படங்களில் நடித்தும் வருகிறான்.

'என்வீடு' படத்தில் சுதா

கர் பசிக்குப் பச்சைத் தண்ணீர் குடிக்கும்போதும், அம்மாவுக்குத் தைரியம் சொல்லும்போதும் நம்மை நாமே மறந்துவிடுகிறோம்!

சுதாகர் பல இரவுகள் சேர்ந்தாற்போல் 'ஷூட்டிங்'கில் இருக்க வேண்டியிருக்கிறதாம். ஒரு சமயம், மூன்று நாட்கள் இரவும் பகலும் விழித்திருந்து நடித்ததாகச் சொன்னான்!

சுதாகருக்கு நடிப்பதற்கு மட்டும்தான் தெரியும் என்று தானே நினைக்கிறீர்கள்? அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆனால், 'நான் சில தெலுங்குப் படங்களில் நடிக்கும் பாலர்களுக்கு இரவல் குரல் கொடுத்திருக்கிறேன்' என்று அவன் கூறியதைக் கேட்டதும், நான் ஆச்சரியப்பட்டேன்!

சுதாகர் தற்போது, சென்னை தேனாம்பேட்டையிலுள்ள ஒரு சிறிய வீட்டில் ஒரு பகுதியில் வசித்து வருகிறான். அவனுடன் அவன் அப்பா, அம்மா, சித்தப்பா, மாமா முதலியோர் இருக்கிறார்கள். 'பிரைவேட்'டாகப் படித்து வருகிறான்.

சுதாகருக்கு ராட்கேமிரான், ராஜ்கபூர், அசோக்குமார், ராஜகுமாரி, மதுபாலா, மாஸ்டர் சேது, மாஸ்டர் மோகன் இவர்களை மிகவும் பிடிக்குமாம்.

'யூகிவாரிசு' என்ற ஜப்பானியப் படத்தைப் பற்றி நான் கேட்டபோது அவன், "அந்தப் பையனைப் போலவே எனக்கும் ஒரு முக்கிய பாகத்தைக் கொடுத்தால் நானும் நன்றாக நடிப்பேன். டைரக்டர்கள் என் இஷ்டப்படி என்னை நடிக்கவிட்டால், இன்னும் நன்றாக நடிக்கமுடியும் என நினைக்கிறேன்" என்று கூறினான்.

"மாடர்ன் தியேட்டர்ஸ் முதலாளிதான் என் விருப்பப்படியே 'வளையாபதி'யில் என்னை நடிக்க அனுமதித்தார். டைரக்டர் உதவியில்லாமலே நான் அதில் நடித்திருக்கிறேன்" என்று சுதாகர் பெருமையுடன் சொன்னான். சுதாகருக்கு இப்போது 'ஸ்டுடியோ', 'ஷூட்டிங்' என்பதெல்லாம் விளையாட்டாகப்போய்விட்டதாம்.

மறந்தேபோய்விட்டேனே! சுதாகருக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டுக்கள் என்னென்ன தெரியுமா? தான் சொந்தத்தில் வைத்திருக்கும் 'புரொஜக்டர்' மூலம் சினிமாக் காட்டுவது; தோழர்களுடன் சேர்ந்து சமையல் செய்வது!

சுதாகர் வருங்காலத்தில், தான் ஒரு பெரிய 'காமிராமேன்' ஆக வேண்டுமென்று ஆசைப்படுகிறான். தன் நடிப்புக் கலையை நாகய்யா, நாகேந்திரராவ் முதலியோர் மூலம் விருத்தி செய்துகொள்ள விரும்புகிறான்.

இவ்வளவையும் சொன்னேனே, அவனுக்குப் பிடித்தமான பத்திரிகைகள் என்னென்ன என்பதை மட்டும் சொல்லாமல் விடலாமா? 'பாலா, சந்தமாமா, ஆந்திர பத்திரிகா முதலியவைகளிடத்தில் எனக்குப் பிரியம் அதிகம்' என்று சுதாகர் என்னிடம் சொன்னான்.

"என்ன! எல்லாம் தெலுங்குப் பத்திரிகைகளாகவே இருக்கின்றனவே! அவன் நடிப்பதெல்லாமே அநேகமாகத் தமிழ் படங்களில்தான். அப்படியிருந்தும், ஒரு தமிழ்ப் பத்திரிகையைக் கூட அவன் படிப்பதில்லையா!" என்று தானே நீங்கள் கேட்கிறீர்கள்?

அவனுக்குத் தமிழ் தெரிந்தால்தானே அவன் தமிழ்ப் பத்திரிகையைப் படிக்க முடியும்; படித்து ரசிக்க முடியும்?

அவனுக்குச் சுமாராகத்தான் தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். அவன் சென்னைக்கு வந்தபோது, தமிழில் ஓர் எழுத்துக்கூடத் தெரியாதாம். ஆனாலும், கொஞ்ச நாட்களில் தெருச் சுவர்களில் காணப்படும் 'வால் போஸ்டர்'களைப் (சுவரொட்டிகள்)

பார்த்துப் பார்த்து ஓரளவு தமிழ் எழுத்துக்களைத் தெரிந்துகொண்டானும். அவனுக்கு ஒரு நல்ல தமிழ்ப் பண்டிதரைக்கொண்டு தமிழ் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப் போவதாக அவன் அப்பா என்னிடம் கூறினர். சுதாகர் தன் வாழ்நாள் முழுவதும் நடிப்புக் கலையை வளர்க்கவே பாடுபடப்போகிறுனும்; 'பணமே பிரதானம்' என்ற நினைப்பு அவனுக்கில்லையாம்!

அவனுடன் நான் பேசிக்கொண்டிருந்த இரண்டரை மணி நேரமும் இரண்டரை விநாடிபோல்பறந்துவிட்டது! சுதாகருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும்படி ஆண்டவனை வேண்டிக் கொண்டு, 'ஜிலு ஜிலு' என்று எனக்கு அவன் கொடுத்த 'கிரஷை'க் குடித்துவிட்டு வெளியே வந்தேன்.

★

பேச்சு சுவாரஸ்யம்!

இப்போது கூறப்போகும் நிகழ்ச்சி சில ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகும்.

ஒரு நாள் ஆல்பர்ட் ஈன்ஸ்டின் என்ற விஞ்ஞானி கலிபோர்னியாவிலுள்ள தொழிற் கல்விச் சாலை ஒன்றைப் பார்வையிடச் சென்றிருந்தார். அங்கே பூகம்ப ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் இருந்தார்.

அவரும் ஈன்ஸ்டினும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். நேரம்போவதே அவர்களுக்குத் தெரியவில்லை. வெகு நேரம் சென்றுவிட்டது. பேச்சை முடித்துக்கொண்டு, ஈன்ஸ்டின் புறப்பட்டார். தாம் தங்கியிருந்த ஓட்டலுக்கு விரைந்து சென்ருர்.

அங்கே-ஓட்டலிலே ஒரே களேபரமாக இருந்தது. ஈன்ஸ்டினுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'விறுவிறு' வென்று தம் மனைவியிருந்த அறைக்குச் சென்ருர். அங்கே அவர்மனைவி மயக்கமாய்க் கிடந்தாள்.

அது கண்டு திடுக்கிட்ட ஈன்ஸ்டின் தம் மனைவியை ஆசுவாசப் படுத்தி "என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

உடனே, அந்த அம்மையார், "என்ன! என்ன நடந்தது என்ருு கேட்கிறீர்கள்? சற்று முன் பூகம்பம் ஏற்பட்டதே; உங்களுக்கு அது தெரியாதா?" என்ருர், அதிக ஆச்சரியத்துடன்.

பேச்சு சுவாரஸ்யத்தில் ஈன்ஸ்டினுக்கோ, அவர் நண்பரான பூகம்ப ஆராய்ச்சி நிபுணருக்கோ பூகம்பம் ஏற்பட்டது தெரியாமலே போய்விட்டது!

எல்லாம்

எ. ந.

முன்

[சங்கரன் விளையாடும்போது மோதிரத்தைத் தொலைத்துவிட்டதால் வீட்டைவிட்டு வந்து ஆற்றில் விழுகிறான். சாக மனம் வரவில்லை. நீர் அவனைக் காட்டுவழியாக இழுத்துச் செல்கிறது. அப்போது, அவனைத் தூக்கி வந்து மூர்ச்சை தெளிவிக்கிறான்! பிறகு, சங்கரனின்

"ஏனோ, என்கதை கேட்டதுமே
இப்படி நீயும் சிரிக்கின்றாய்?
நண்பா, காரணம் என்ன?" என
நயமுடன் சங்கரன் கேட்டனனே.
"உன்றன் கதையைக் கேட்டாலே
உலகில் உள்ளோர் சிரித்திடுவர்.
அப்பா அடித்தால் அதற்காக
ஆவியைப் போக்க எண்ணுவதா?
ஆண்டவ னன்றோ இவ்வுலகில்
ஆருயி ரனைத்தும் ஆக்குபவன்?
அவனது விருப்பம் அதற்கெதிராய்
ஆவியைப் போக்கிட முயலுவது
குற்றம் அன்றோ? அவ்வாறு
கோழைக ளன்றோ செய்திடுவர்!
அடித்திடும் கரங்கள் அவையேதான்
அணைத்திடும் என்பதை அறியாயோ?"
குப்பன் அறிவுரை கேட்டதுமே,
குற்றம் உணர்ந்தான், சங்கரனே.

* * *



காலையில் குப்பன் உணவிற்குக்
கனிகள் கொய்திடப் புறப்பட்டான்.
அயர்ந்து தூங்கும் சங்கரனை
அலட்டிட வேண்டாம் எனஎண்ணி,
குடிசை விட்டு வெளியேறிக்
கொய்யாத் தோப்பினை அடைந்திட்டான்.
மரத்தில் ஏறிக் கனிகளையே
மகிழ்வுடன் பறித்துத் தின்றிட்டான்.

நன்மைக்கே!

கணபதி

கதை

அப்பா நன்றாக அடித்துவிடுகிறார். கோபம் கொண்ட சங்கரன் இரவில் கரைசேர முயலுகிறான்; முடியவில்லை. மயக்கமடைகிறான். ஆற்று தந்தையைத் தேடிவந்த குப்பன் என்ற ஒரு விறகு வெட்டியின் [illegible] கதையை அவன் கேட்கிறான்! கேட்டதும், சிரிக்கிறான்.]

அப்போ தவனது நெஞ்சினிலே
அப்பா நினைவு புகுந்ததுவே.
'எங்கே சென்றார், நம் தந்தை?
ஏனோ நேற்றவர் வரவில்லை?'
இப்படி எண்ணிய குப்பனவன்
இதயம் நொந்தான்; வருந்திட்டான்.

* * *

சங்கரன் குடிசையில் விழித்தவுடன்,
தன்னைச் சுற்றிப் பார்த்திட்டான்.
அவனைத் தவிரக் குடிசையிலே
யாரும் இல்லை என அறிந்தான்.
குடிசையில் இருந்து வெளியேறிக்
குப்பனைத் தேடிட மனம்நாடி,
கால்கள் போன திசைதனிலே
கடுகி நடந்தனன், சங்கரனும்.
அப்படிச் சென்றிடும் வேளையிலே
அங்கொரு மரத்தின் அருகினிலே,

சப்தம் ஏதோ மெதுவாகச்
சலசல வென்று கேட்டிடவே,
மரத்தின் பொந்தில் நன்றாக
மறைந்தவன் கூர்ந்து பார்த்திட்டான்.
அந்த மரத்தின் அருகினிலே
அடர்ந்து வளர்ந்த புதரதனை,
விலக்கிக் கொண்டு ஒருமனிதன்
வெளியே வந்தான்; நடந்திட்டான்.

(தொடரும்)



பயத்துக்கு மருந்து!

தி. ஜானகிராமன்

கோபாலன் நன்றாகத்தான் படிப்பான். ஆனாலும், 'பரீட்சை' என்றால் அவன் அடிவயிறு கலங்கும். பரீட்சைக்கு ஒருவாரம் இருக்கும்போதே அவனுக்குப் 'பரீட்சைப் பயம்' பிடித்துவிடும். பரீட்சை நெருங்கிவிட்டால் எப்போதும் இதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பான். 'பரீட்சையில் தோற்றுவிட்டால்...?' என்று நினைக்கும்போதே அவன் தலை சுற்றும்; உள்ளம் நடுங்கும்; உடல் வியர்க்கும்! அவன் அப்பா இந்தப் பரீட்சை விஷயம் தவிர மீதி விஷயங்களில் மிகவும் நல்லவராகவே தென்பட்டார், அவனுக்கு!

'நன்றாக எழுதினால் தேறிவிடலாம். ஆனால், நான் நன்றாக எழுதுவேன் என்பது என்ன நிச்சயம்?' என்று அவன் நினைத்துக்கொள்வான். பிறகு, 'நான் கட்டாயம் தேறமாட்டேன். தோற்றுப்போய் விடுவேன்!' என்று நினைப்பான். உடனே, அவன் எதிரில் அவன் அப்பா கதாயுதத்துடன் காட்சியளிப்பார்! அவன் உடல்நடுநடுங்கும்.

இந்த நிலையில் அவன் எந்தப் புத்தகத்தைத் தொட்டாலும் உடலெல்லாம் உதறும். பரீட்சைக்கு முதல் நாள் இரவு அவன் நிம்மதியாகத் தூங்கமாட்டான். தூக்கம் வரவே வராது. அவன் மனத்தில் பரீட்சையைப் பற்றிய எண்ணமே இருக்கும்.

'நான் தேறிவிடுவேனா?' என்று எண்ணிக்கொண்டே ஏதேதோ கனவுகளைக் காண்பான்.

பரீட்சை யன்று நடு நடுங்கிக் கொண்டே பள்ளிக்குச் செல்வான். பரீட்சை 'ஹாலு'க்குள் வந்தவுடன் அவன் உடல் முழுவதும் நுந்தியடிக்கஆரம்பித்துவிடும். கேள்விப் பேப்பரைக் கையில் கொடுத்தவுடனே... அவன் நிலையை என்னல் வர்ணிக்க முடியாது! உடலெல்லாம் வியர்க்க எழுத எத்தனிப்பான். குறுக்கே அவன் மனம் நிற்கும்.

'நாம் எழுதுவது சரியோ, தப்போ! இப்படி எழுதலாமா; அப்படி எழுதலாமா?' என்றெல்லாம் எண்ணுவான். கடைசியில் ஒன்றும் எழுதாமல் உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்து வந்துவிடுவான்!

கோபாலனின் மனத்தில் அடிக்கடி ஒரு கேள்வி எழும். 'பயத்தைப் போக்குவதற்கு ஒரு வழியும் இல்லையா?' என்ற கேள்விதான் அவன் மனத்தில் எழும்.

'இதற்கு ஏதாவது மருந்து இருக்குமா? என்னென்னவோ மருந்துகளெல்லாம் கண்டு பிடித்திருக்கிறார்களே; இதற்கும் கண்டு பிடித்திருப்பார்களா? அவன் எண்ணி எண்ணி இப்படியெல்லாம் ஏங்குவான்.

அன்று அவனுக்கு அவனுடைய மாமாவின் ஞாபகம் வந்தது. அவன் மாமா ஒரு டாக்டர். அவர் மைசூரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். லீவு எடுத்துக்கொண்டு வருவதாக எழுதியிருந்தார். 'மாமா இங்கு வரும்போது இதுபற்றிக் கேட்க வேண்டும்' என்று முடிவு கட்டினான்.

மாமாவும் வந்தார். அவர் வந்தவுடன், தன் எண்ணத்தைச் சொல்லித் துயரப்பட்டான், கோபாலன். மாமாவுக்கு கோபாலனின் விஷயம் நன்றாகத்தெரியும், கோபாலன் தன் எண்ணத்தைச் சொன்னவுடன் அவர் ஏதோ யோசித்தார். பிறகு, ஒரு முடிவுக்கு வந்தவர்போல் மகிழ்ச்சியுடன், "ஓ, இருக்கிறதே! அம் மருந்து ஊரில் இருக்கின்றது. அது உனக்கு வேண்டுமா?" என்று கேட்டார்.

அப்போது பார்க்க வேண்டுமே, கோபாலனின் முகத்தை! போன தடவை மாமா அவனுக்காக ஒரு பொம்மை, 'புஷ்கோட்', 'கிரிக்கெட் பேட்' முதலியவற்றை வாங்கி வந்தபோதுகூட இவ்வளவு சந்தோஷத்தை அவன் முகத்தில் காணேம். இப்போது, அவன் அவ்வளவு சந்தோஷம் அடைந்தான். அவனிடம் இருந்தது அந்த ஒரே ஒரு குறைதானே! அதுவும் இனிமேல் இருக்காது என்றால் யாருக்குத்தான் சந்தோஷம் ஏற்படாது!

மிகவும் மகிழ்ச்சியுடன், "மாமா, நீங்கள் போனவுடனே அதைத் தபாலில் அனுப்பிவிடுங்கள். மறந்து விடாதீர்கள் !" என்றான். மாமா பலமாகத் தலையை ஆட்டினார்.

மாமா ஊருக்குப் போகும் போது, "மாமா, மறந்துவிடாதீர்கள். கட்டாயம் அனுப்பி வையுங்கள்" என்று இருபதாவது தடவையாகக் கூறி அனுப்பினான். மாமாவும் சரி என்று சொல்லிவிட்டுப் போனார்.

அன்று நொடிக்கு ஒருதரம் தெருவை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான், கோபாலன். யாரை அவ்வளவு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்? காக்கிச் சட்டையணிந்த மனிதரை—தபால்காரரைத்தான் அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

தபால்காரர் ஒரு 'பார்சலை'க் கோபாலனிடம் கொடுத்தார். ஆட்டின் தோலைக் கிழிக்கும் சிங்கம்போல் பார்சலின் மேலிருந்த தாள்களை அவசர அவசரமாகப் பிரித்தான், கோபாலன். அவன் எதிர்பார்த்ததுதான் அதில் இருந்தது.

வெளியே எடுத்தான். அது ஒரு புட்டி. அதனுள் மஞ்சள் நிறத் திரவம் இருந்தது.

"அப்பா, என்னை எங்கள் கணக்கு வாத்தியார் 'தீவட்டித் தடியன், தீவட்டித் தடியன்' என்கிறார். நான் தீவட்டி பிடிக்கத்தான் லாயக்காம்."

"சரிதான், அவருக்கு உன்னைப் பற்றிச் சரியாய்த் தெரியாது போலிருக்கிறது. தீவட்டி பிடிக்கிறதுக்கும் கெட்டிக்காரத்தனம் வேணும்டா. தீவட்டியை நேரே பிடித்தால், தலையிலே எண்ணெய் வழியும்; சாய்த்துப் பிடிக்கணும். நீ அதுக்குக்கூட லாயக்கில்லை."

கோபாலன் மகிழ்ச்சியின் எல்லையைக் கடந்துவிட்டான்.

"இனி, பரீட்சைக்குப் பயந்து சாக வேண்டியதில்லை. ஏ, பரீட்சை யென்னும் பிசாசே! நீ நாளைக்கே வேண்டுமானாலும் வா. பயமில்லை. இதோ இருக்கிறது, மாமாவின் மருந்து! ஹாஹ் ஹா!' என்று கூறி ஏளனமாகச் சிரித்தான்.

பரீட்சை வந்தது. கோபாலனுக்குப் பழைய பீதி ஏற்பட்டது. உடனே, மாமாவின் மருந்தை அவன் நினைத்துக்

கொண்டான். பயம் பறந்து விட்டது. நிம்மதியுடன் படுத்தான். தன்னை மறந்து தூங்கி விட்டான்.

காலையில் பரீட்சைக்குப் போகுமுன் அந்த மருந்துப் புட்டியை எடுத்துச் சிறிது மருந்தைக் குடித்தான். அது சிறிது காரமாயிருந்தது. சண்டைக்குத் தயாராகும் புலியைப்போல் உடலை ஒரு தரம் உலுக்கிக்கொண்டான்.

'இனி நான் பழைய பயங்கொள்ளிக் கோபாலன் அல்ல; தைரியசாலிக் கோபாலன்!' என்று நினைத்துக் கொண்டே பரீட்சை அட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு பள்ளியை நோக்கி ராஜ நடை போட்டுக் கொண்டே சென்றான்.

பரீட்சை ஹாலுக்குள் நுழைந்தான். அவன் உடல் முன்போல் தந்தியடிக்கவில்லை! காரணம், அவன் மனம்தான். 'பெயிலாகி விட்டால்' என்று எண்ணமல் மாமாவின் மருந்தைப்பற்றி நினைத்துக் கொண்டதனுல்தான்!

கேள்வித் தாள் கொடுத்தவுடன் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. உடனே, காலையில் தான் குடித்த மருந்தை நினைத்தான். பயம் பறந்து விட்டது! பிறகு, அலட்சியமாகப் பரீட்சையை எழுதி விட்டு வீடு வரும்போது சிப்பாய்போல் வீர நடை போட்டுக்கொண்டு வந்தான்.

இப்போதெல்லாம் கோபாலன் பரீட்சைக்காகப் பயப்படுவதில்லை. 'அட, பரீட்சையா! வந்துவிட்டுப் போகட்டுமே! என்னிடம்தான் மருந்து இருக்கிறதே! இப்போது பரீட்சை என்ன, எமனே எதிரில் வந்தாலும் பயமில்லை!" என்று விரைப்பாகக் கூறி வருகிறுன்.

"அத்தகைய அதிசய மருந்து எங்கே கிடைக்கிறது? எனக்கும் ஒரு......" என்று கேட்கிறீர்களா?

அம்மருந்தை நீங்களே செய்யலாம். அதற்கு வேண்டிய சாமான்கள் இரண்டே இரண்டுதான். கொஞ்சம் தண்ணீர், சுக்கு இரண்டும் இருந்தாலே போதும்! ஆம், கோபாலனின் மாமா சிறிது சுக்கை எடுத்துத் தண்ணீரில் கரைத்துத்தான் அவனுக்கு அனுப்பி வைத்திருந்தார்!

இந்த ரகசியம் இன்னும் கோபாலனுக்குத் தெரியாது. இந்த ரகசியத்தை நீங்கள் போய் அவனிடம் சொல்லி விடாதீர்கள்! அப்புறம், அவனுக்குப் பழைய பயம் வந்து விடும்! கைகால்கள் தந்தியடிக்க ஆரம்பித்துவிடும்! வீணுகப் பரீட்சையில் வெற்றி பெருது போய்விடுவான்!

★

பளிங்கு மண்டபம்

நெ. சி. தெய்வசிகாமணி

முன் கதைச் சுருக்கம்

காட்டூரில் வசிக்கும் துரைசாமி என்ற ஓர் ஏழைத் தொழிலாளி, மனோஹரனை மிகவும் அருமையாக வளர்த்து வருகிறார். அவர் மனைவி ஜானகியும் மனோஹரனிடம் உயிரையே வைத்திருக்கிறாள்.

ஒருநாள் மனோஹரன் பள்ளியிலிருந்து திரும்பி வரும்போது, பணக்காரச் சிறுவனான சோமசுந்தரம் என்பவனும், அவன் நண்பர்களும் மனோஹரனின் கிழிந்த சட்டையைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள். பொறுமை இழந்த மனோஹரன் சோமசுந்தரத்தின் 'புஷ்கோட்'டைக் கிழித்துவிடுகிறான். உடனே, சோமசுந்தரத்தின் நண்பர்கள் மனோஹரனை நன்றாக அடித்துப் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த மனோஹரன் வீட்டுக்குப் போகப் பயப்பட்டுக்கொண்டு அவன் அப்பாவின் நண்பரும், சேனூரில் வசிப்பவருமான சாமு மாமாவின் வீட்டுக்குப் போகிறான். அங்கு அவனைத் தேடிக்கொண்டு அவன் அம்மா ஜானகி வந்திருக்கிறாள். அப்பாவுக்குப் பயந்துகொண்டு சாமு மாமாவின் வீட்டுக்கு வந்த மனோஹரனை அம்மா தன்னுடன் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்படுகிறாள். அவர்கள் ஏறிச் சென்ற குதிரை வண்டியில் பூட்டப்பட்ட குதிரை இடக்கு செய்ததால் சாமு மாமாவும் அவர்களுடன் செல்லவேண்டி வந்தது.

மனோஹரன், ஜானகி, சாமு மாமா ஆகிய மூவரும் வீட்டுக்கு வரும்போது வீடு பூட்டப்பட்டு இருக்கிறது. அவர்கள் வருவதற்குச் சற்று முன்னால் யாரோ நாலைந்து முரடர்கள் வந்து மனோஹரனின் அப்பாவை அடி அடியென்று சக்கையாக அடித்துப் போட்டுவிட்டதாகவும், அப்பா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்

டிருப்பதாகவும் கேள்விப்பட்ட மூவரும் துடி துடித்தபடியே ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள். ஆஸ்பத்திரியில் சாகுந்தருவாயில் இருந்த மனோஹரனின் அப்பா, மனோஹரனிடம் தன்னைச் சோமசுந்தரத்தின் அப்பா மாணிக்கவேலு முதலியார்தான் ஆளைவைத்து அடிக்கச் சொன்னார் என்று சொல்கிறார். அத்துடன் தனக்குப் பிறகு அவன் ஜானகியை அம்மாவைப்போல் காப்பாற்றவேண்டும் என்று சொல்லிவிட்டு, அவன் தன்னுடைய சொந்த மகன் அல்ல என்பதையும் ஜாடையாகச் சொல்லிவிட்டு இறந்துவிடுகிறார்.

ஜானகி அம்மாளை சாமு மாமா வற்புறுத்திக் கேட்டதன்பேரில், "மனோஹரனின் தாய் மனோஹரன் பிறந்ததும் இறந்துவிட்டாள். அவனுடைய அப்பா என் கணவருடன்தான் வேலை செய்து கொண்டு எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்தார். திடீரென்று வேலை போய்விட்டதால் மனோஹரனைக் கொண்டுவந்து எங்களிடம் விட்டுவிட்டு ஒருநாள் 'வேலை பார்க்கப் போய்வருகிறேன்' என்று போனவர் போனவர்தான்! இன்னும் வரவில்லை. அன்றிலிருந்து மனோஹரனை எங்கள் சொந்த மகனைப்போல நாங்கள் காப்பாற்றி வருகிறோம்" என்று மனோஹரனின் பூர்வீகத்தைச் சொல்லுகிறாள்.

தன் கணவன் இறந்த பிறகு அம்மா பலகாரம் செய்துகொடுக்க அதை மனோஹரன் கடை வீதியில் விற்றுவருகிறான். இப்படிச் சில நாட்கள் செல்கின்றன.

அம்மாவின் உடன் பிறந்த அண்ணன் தமது தங்கையின் நிலையைக் கேள்விப்பட்டு வருகிறார்; தங்கையைத் தன்னுடன் வரச் சொல்லுகிறார். அம்மா மறுக்கிறாள். தான் அவருடன் வந்துவிட்டால் மனோஹரன் அனாதையாகி விடுவான் என்கிறாள். அவனையும் கூட்டிக்கொண்டு தம்முடன் வரச்சொல்கிறார், அண்ணா. அவ்வாறே செல்கின்றனர். அம்மாவின் அண்ணன் வீட்டில் மனோஹரனை ஒருவர்கூட மதிக்கவில்லை. அவனை, ஒரு 'தண்டச் சோற்று ராம'னாகவே எல்லோரும் நினைக்கிறார்கள். போதாக் குறைக்கு அம்மாவின் அண்ணியும், அவள் மகனும் மனோஹரன் பேரில் இல்லாத திருட்டுப் பழியையெல்லாம் சுமத்துகிறார்கள். அதன் பலனாக மனோஹரன் இரவோடு இரவாக அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். அக்கடிதத்தில், "எனக்கு இந்த வீட்டில் இருப்பதே அவமானமாக இருக்கிறது. என்னால், உனக்கும் வீண் கஷ்டம். நான் சென்று ஏராளமாகப் பணம் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்" என்று எழுதி வைத்துவிட்டு வருகிறான்.

பட்டணத்திற்குச் செல்லும் வண்டியில் 'டிக்கெட்' இல்லாமல் பிரயாணம் செய்த மனோஹரனை 'டிக்கெட்' பரிசோதகர் கீழே இறக்கிவிட்டு விடுகிறார். அதே பெட்டியில் 'டிக்கெட்' இல்லாமல்

பிரயாணம் செய்த இன்னொரு சிறுவனையும் இறக்கிவிட்டு விடுகிறார்.

மனோஹரனும், மாதவனும் (அந்தச் சிறுவனின் பெயர்) நண்பர்களாகிவிடுகின்றனர். மாதவன் தன் கதையை மனோஹரனுக்குச் சொல்கிறான். அவனும் மனோஹரனைப்போல் வீட்டைவிட்டு ஓடி வந்தவன்தான்!

"எனக்கு அப்பா இருக்கிறார்; அம்மா இருக்கிறாள், அப்பா இரண்டாவது மணம் செய்துகொண்டார். சித்திக்கு எங்களைக் கண்டால் பிடிக்கவில்லை. எங்களைத் தனியாகக் குடி வைத்துவிட்டார், அப்பா. மாதம் குடும்பச் செலவுக்கு இருபது ரூபாய் கொடுத்து வந்தார். அது போதவில்லை. ஒருநாள் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டப் பணம் இல்லாமல் அப்பாவைக் கேட்க அவர் வீட்டுக்குப் போனேன். அவர் இல்லை. சித்தி கண்டபடி திட்டினாள். வெளியே எங்காவது போய்க் கஷ்டப்பட்டு உழைத்து நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டுவந்து சித்தியே பிரமித்துப் போகும்படி செய்யவேண்டும் என்ற நினைப்புடன் வீட்டைவிட்டு வந்தேன்" என்கிறான், மாதவன்.

மாதவன் பணம் சம்பாதிப்பதற்காகக் கூலி வேலை செய்து வருகிறான். மனோஹரன் எந்த வேலையும் செய்யாமல் மாதவன் சம்பாத்தியத்திலேயே காலம் கழித்து வருகிறான். ஒருநாள், சமூக சேவா சங்கக் காரியதரிசி சொன்னபடி வால்போஸ்டர்கள் ஒட்டவும், துண்டு நோட்டீஸ்கள் கொடுக்கவும் ஒப்புக்கொண்டு எட்டணா முன் பணம் வாங்கிக்கொண்டு மனோஹரனுடன் புறப்படுகிறான். ரயில்வே ஸ்டேஷன் அருகில் இருந்த கடையில் போஸ்டர்களையும் நோட்டீஸ்களையும் கொடுத்து வைத்துவிட்டுக் கடைவீதி செல்கின்றனர். எதிரே சாமு மாமா அவர்களைப் பார்த்துவிடுகிறார். மனோஹரனைத் தம்முடன் வரச்சொல்லிக் கூப்பிடுகிறார். மனோஹரனுக்கு அவருடன் போகப் பிரியமில்லை. மாதவனும் இந்தச் சமயத்தில் அவனை அவர் கூட்டிப்போவது அவ்வளவு உசிதமல்ல என்று சொல்கிறான். சாமு மாமாவும் மனோஹரனிடம் விடை பெற்றுக் கொண்டு ஊருக்குப் போகிறார். போகும்போது மனோஹரனுக்குப் பத்து ரூபாய் கொடுத்துவிட்டுப் போகிறார்.

மனோஹரன் மாதவனை அழைத்துக்கொண்டு ஓர் ஓட்டலுக்குப் போகிறான். மாதவன் பிடிவாதமாக ஒன்றும் சாப்பிடமாட்டேன் என்று சொல்லிவிட்டதால் மனோஹரன்மட்டும் வயிறு நிறையப் பலகாரங்கள் வாங்கிச் சாப்பிடுகிறான், பிறகு 'பில்'லுக்குப் பணம் கொடுப்பதற்காகக் கால்சட்டைப் பையில் கையை விட்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. சாமு மாமா கொடுத்த பத்து ரூபாய் நோட்டு கால்சட்டைப் பையில் இல்லை! அவன் திருதிருவென்று திருடனைப்போல விழித்துக்கொண்டிருக்கிறான்.

(இனி, மேலே படியுங்கள்)

சென்னை-600 008

9. குடிசையில் குரல்!

பல நாளாகப் பட்டினி இருந்தவன் முன்னால், ஒரு பெரிய வாழை இலையைப் போடுகிறோம்; அந்த இலை நிறையப் பலவிதமான பலகாரம், காய்கறி, கூட்டு இவைகளை வைக்கிறோம். அவைகளை அவன் ஆவல் ஆவலாகச் சாப்பிடப் போகும்போது 'லபக்'கென்று அந்த இலையைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போய் விட்டால், அவன் நிலை எப்படி இருக்கும்? அந்த நிலையில்தான் மனோஹரன் இருந்தான்.

அவனுக்கு ஒரு தம்பிடிகூட வருமானம் கிடைக்கவில்லை. அப்படியிருக்கும்போது தெய்வச் செயலாகச் சாமு மாமா அவனைச் சந்தித்தார். அவர் அவன் செலவுக்காகப் பத்து ரூபாய் கொடுத்தார். அந்தப் பத்து ரூபாயும் தொலைந்து போய்விட்டதென்றால் மனோஹரனின் நிலை எப்படியிருக்கும்?

"என்ன தம்பி, விழிக்கிறாய்? பணமில்லையா?" என்று அதிகாரக் குரலில் ஓட்டல் முதலாளி மனோஹரனைப் பார்த்து மிரட்டினார்.

"நிஜார் பையிலே வைத்திருந்தேன். எங்கேயோ விழுந்துவிட்டது......" என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னான், மனோஹரன்.

"எவ்வளவு பணம் வைத்திருந்தாய்?"

"பத்து ரூபாய் நோட்டு வைத்திருந்தேன். அதுதான் இந்த ஓட்டை வழியாக விழுந்துவிட்டது" என்று கால் சட்டைப் பையில் இருந்த ஓட்டையை ஓட்டல் முதலாளிக்குக் காட்டினான், மனோஹரன்.

"பத்து ரூபாயா! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? இங்கே யாரிடம் கதை விடுகிறாய்? ஏன், ஓட்டலுக்குள் நுழைவதற்கு முந்தியே பையில் பணமிருக்கிறதா, இல்லையா என்று பார்த்துக்கொண்டு நுழைவது தானே!" — ஓட்டல் முதலாளி இப்படிக் கேட்டதும், இவ்வளவு நேரம் மௌனமாக இருந்த மாதவன் பேச ஆரம்பித்தான்:

"மிகவும் வேடிக்கையாக இருக்கிறதே, நீங்கள் கேட்பது? மறு நாள் வரப்போகும் ஜுரத்திற்கும், தலைவலிக்கும் முன்தினமே 'லீவ் லெட்டர்' எழுதிக் கொடுக்கச் சொல்வது போலல்லவா இருக்கிறது, உங்கள் பேச்சு! பணம் தொலைந்து போகட்டும் என்று நினைத்தா அந்தப் பையில் நோட்டைப் போட்டான்? போட்ட பணம் தொலைந்து போயிருக்குமென்று உங்கள் ஓட்டலுக்குள் நுழைவதற்கு முன்னாலேயே அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அப்படித் தெரிந்திருந்தால், பத்து ரூபாய் போன துக்கத்துக்கு அழாமல், உங்கள் ஓட்டலில் உட்கார்ந்து ஆனந்தமாகச் சாப்பிட்டுக் கொண்டா இருப்பான்?" என்று

கொஞ்சம் படபடப்புடன் ஓட்டல் முதலாளியைப் பார்த்துக் கேட்டான், மாதவன்.

"ஏய், யாரடா நீ? இவ்வளவு திமிராகப் பேசுகிறாயே! பணத்தை எண்ணி வைத்துவிட்டு மறுவேலை பார்க்க வேண்டும். உங்களைச் சும்மா விடமாட்டேன்" என்று மாதவனின்மேல் பாயாத குறையாகக் கேட்டார், ஓட்டல் முதலாளி.

"சரி, வீண்பேச்சு எதற்கு? பணம்தானே ஐயா, உமக்கு வேணும்? எவ்வளவு தரவேணும்? பத்தணாத்தானே! இந்தாருங்கள், உங்கள் பணம்" என்று சொல்லித் தன் பையிலிருந்த பத்தணாவை எடுத்து ஓட்டல் முதலாளியிடம் கொடுத்துவிட்டு, "மனோஹர், வாடா போகலாம்" என்று அவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான், மாதவன்.

"மாதவா, சாமுமாமா கொடுத்த பத்து ரூபாய் இருக்கிறதென்ற நினைப்பில்தான் ஓட்டலில் சாப்பிட்டு விட்டேன். இதுவரையில் ஒரு தம்பிடிகூட நான் சம்பாதிக்கவில்லை. நீ ஒன்றேகால் ரூபாய் சம்பாதித்தாய். ஆனால், நீ மட்டும் இன்றைக்கெல்லாம் ஒன்றுமே சாப்பிடவில்லை. மத்தியானம் நீ சாப்பிட இருந்த இட்டலியைக் கூடக் காக்கை எச்சமிட்டுக் கெடுத்துவிட்டது. மாதவா, நான் உனக்கு மிகவும் சிரமத்தைத் தருகிறேன்" என்று மாதவனிடம் துயரம் தோய்ந்த குரலில் சொன்னான், மனோஹரன்.

"மனோஹர், சாமு மாமா கொடுத்த அந்தப் பத்து ரூபாய் தொலைந்து போனதே நல்லது. அந்தப் பத்து ரூபாய் இருக்கிறவரைக்கும் உனக்குச் சம்பாதிக்க வேண்டும் என்கிற உணர்ச்சியே இருக்காது. அப்போதே அதைக் கிழித்து எறிந்துவிடச் சொல்லலாம் என்றுதான் நினைத்தேன். ஆனாலும், யாருக்குத்தான் பத்து ரூபாய் நோட்டைக் கிழித்தெறிய மனம் வரும்? எனவேதான் நான் பேசாமலிருந்தேன். அந்தப் பணம் தொலைந்துபோனதும் ஒரு விதத்தில் நல்லதுதான். இனிமேலாவது உன் தேவைக்குச் சம்பாதிக்க வேண்டுமே என்கிற உணர்ச்சி உனக்கு ஏற்படாதா?" என்றான், மாதவன்.

இருவரும் பேசிக்கொண்டே வந்துகொண்டிருக்கும்போது சற்று தூரத்தில் பத்துப் பதினைந்து சிறுவர்கள் ஏதோ 'போர்டு'களைத் தாங்கியபடியே கோஷமிட்டுக் கொண்டு வந்தார்கள். மாதவனும், மனோஹரனும் அது என்ன என்று அறிவதற்காகக் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றார்கள். கோஷம் வாவாத் தெளிவாகக் கேட்டது.

"கோபாலா!"

"என், ஸார்!"

"எங்கே போறே?"

"கடைக்குப் போறேன்!"

"என்ன வாங்க?"

"பீடி வாங்க!"

"என்ன பீடி?"

"ராமா பீடி"

"வாங்கிப் பார்!"

"குடிச்சுப் பார்!"

—இப்படி அந்தச் சிறுவர்கள் கத்திக்கொண்டு வருவதைக் கண்டதும், "பார்த்தாயா மனோஹர்,

பீடி வாங்கச் செல்கின்ற கூட்டத்தை. ஹூம், 'பதினெட்டு வயதுக் குட்பட்டவர்கள் புகைபிடிக்கக் கூடாது' என்று சட்டம் போடுகிறார்கள். ஆனால், அதே பதினெட்டு வயதுக் குட்பட்டவர்கள் இம்மாதிரிக் கத்திக்கொண்டு போவதை அனுமதிக்கிறார்களே!'' என்று மனோஹரனிடம் சொன்னான், மாதவன்.

வயிற்றுப் பிழைப்புக்காகக் கூலிக்கு மாரடிக்கும் அந்தச் சிறுவர்களின் கோஷம் தேய்ந்து கொண்டே வந்தது.

"வாங்கிப் பார்!''

"குடிச்சுப் பார்!''

தூரத்தில் கத்திக்கொண்டு செல்லும் அந்தச் சிறுவர்களின் கோஷம் மாதவனின் காதில் நாராசமாக விழுந்தது.

"பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்? வயிற்றுப் பிழைப்பு!'' என்று அனுதாபப்பட்டான், மனோஹரன்.

"அதைப் போலச் சொல்லாதே மனோஹர்! முன் ஒரு தடவை நான் ஒன்று சொன்னேனே; உனக்கு ஞாபகமிருக்கிறதா? 'பணம் கிடைப்பதாயிருந்தால் எந்த வேலை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று சொன்னேனே! இப்போது அதை நான் 'வாபஸ்' வாங்கிக் கொள்கிறேன். இப்போது பீடி விளம்பரத்திற்காகக் கத்திக்கொண்டு போனார்களே, இதேபோல் வேலையை லக்ஷம் ரூபாய் கொடுத்தாலும் நான் செய்யமாட்டேன்!''

"சரி, சரி. வா. எல்லோருமே உன்னைப்போல் இருக்க முடியுமா?'' என்று கூறி மாதவனை அழைத்துச் சென்றான், மனோஹரன்.

இருவரும் வரும் வழியில் ஒரு மனிதன் உட்கார்ந்துகொண்டிருந்தான். வயது சுமார் 40 இருக்கும். அவன் ஆடை ஒரே அழுக்காக இருந்தது. அத்துடன், அதில்



ஆயிரம் பொத்தல்கள்! கண்கள் பஞ்சடைத்துப் போயிருந்தன. இரண்டு மூன்று நாட்களாகச் சாப்பிடாதவன் போல் இருந்தான். அவனைப் பார்க்க இருவருக்கும் பரிதாபமாக இருந்தது. உடனே இருவரும் அருகிலே சென்றனர். அப்போது அந்த மனிதன் தன் மடியிலிருந்து ஒரு பீடியையும், நெருப்புப் பெட்டியையும் வெளியே எடுத்தான். பீடியை வாயிலே வைத்து, நெருப்புக் குச்சியை உரசிப் பற்ற வைத்தான்.

இந்தக் காட்சியைப் பார்த்ததும், மாதவனின் முகம் சுருங்கியது. உடனே, அந்த மனிதனைப் பார்த்து "எனப்பா, நீ எங்கே வேலை பார்க்கிறாய்?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"வேலையா! நான் வேலை பார்த்து 30 வருஷமாச்சு!"

"என்ன, முப்பது வருஷமா? அப்படியானால், சாப்பாடு...?"

"பிச்சை எடுப்பேன்"

"இந்த முப்பது வருஷமாய்ப் பிச்சை எடுத்துத்தான் சாப்பிடுகிறாயா!"

"ஆமாண்டா தம்பிகளா, யாரிடத்திலும் போய்க் கைகட்டிச் சேவகம் செய்ய எனக்குப் பிடிக்கவில்லை......"

"அதனாலே, வீதியிலே போகிறவர் வருகிறவரிடம் பல்லைக் காட்டிப் பணம் கேட்டு வருகிறாயாக்கும்!"

"சேச்சே! அப்படிச் சொல்லாதே, தம்பி"

"அது சரி, உன் முகத்தைப் பார்த்தால் பரிதாபமாயிருக்

கிறது. சாப்பிட்டு எத்தனை நாளிருக்கும்?"

"நேற்றுக் காலையிலிருந்து சாப்பாடே இல்லை. எந்தத் 'தர்மப் பிரபுவும்' என் மேல் இரக்கங் காட்டவில்லை."

"ஆமாம், சாப்பாட்டுக்குப் பணமில்லை என்கிருயே! பீடி வாங்க மட்டும் பணம் இருக்கிறதே!"

"சாப்பாடு இல்லாமல்கூடப் பத்துநாள் இருந்து விடுவேன். ஆனல், பீடி இல்லாமல் ஒரு மணி நேரம்கூட இருக்க முடியவில்லையே! மூந்தாம்நாள் இரவு கையில் நாலணு இருந்தது. மொத்தமாக இரண்டு கட்டுப் பீடி வாங்கி விட்டேன்."

"சரி, தினசரி பீடிக்கு மட்டும் எவ்வளவு செலவாகும்?"

"இரண்டணு, மூன்றணுவுக்கு மேல் போகாது"

"என்ன, இரண்டணுவா? எட்டுக் காலணு, இருபத்து நான்கு தம்பிடிகளைப் பீடிக்காகச் செலவிடுகிருயா! என்ன அநியாயம்! சாப்பாட்டுக்கு வழியில்லாத போனலும், பீடி வாங்கமட்டும் மறக்கமாட்டாய் போலிருக்கிறதே!"

"என்ன தம்பி செய்வது? உன்னைவிடச் சின்னப் பையனுக இருக்கும் போதிலிருந்தே இந்தப் பழக்கம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. விளையாட்டாக ஒருநாள் பிடித்துப் பார்த்தேன், அப்புறம், என்னை அது பிடித்துக்கொண்டு விட்டது! நிறுத்த வேண்டுமென்று எத்தனை தரமோ நினைத்தேன். ஆனலும், பலிக்கவில்லை. 'தொட்டில் பழக்கம்' என்பார்களே, அதேபோல் சிறு பிள்ளையா யிருக்கும்போது பழகியது. விட முடியவில்லை."

"மனேஹர், பார்த்தாயா? சிறுவயதில் ஏற்படும் பழக்கங்களை நிறுத்துவது எவ்வளவு சிரமம் என்பதை? அதனல்தான், நம் வயதுப் பையன்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்று அடிக்கடி நான் சொல்லுவது?" என்று மனேஹரனைப் பார்த்து மாதவன் பிரத்யட்ச உதாரணத்தோடு விளக்கினன்.

"ஆமாம் மாதவா, இதனல், இவனுக்கு இதுவரை எவ்வளவு ரூபாய் செலவாகி யிருக்கும்!" என்ருன், மனேஹரன்.

"தினசரி இரண்டணு வீதம் வைத்துப் பார்த்தால்கூட 30 வருஷத்துக்கு 1350 ரூபாய் ஆகிறதே! அடேயப்பா!" என்று புள்ளி விவரத்தோடு கூறினன், மாதவன்.

"தம்பி, அந்த 1350 ரூபாயும் இப்போது என் கையில் இருந்தால், இப்படி நடுத் தெருவிலே உட்கார்ந்தா நான் பீடி பிடித்துக் கொண்டிருப்பேன்?......" என்று ஆசையோடு பிச்சைக்காரன் கூறினன்.

"ஆமாம், இப்போது அந்த ரூபாய் இருந்தால், நீ இப்படிப் பீடி பிடித்துக் கொண்டிருக்கமாட்டாய்; சிகரெட் புகைத்துக்கொண்டிருப்பாய், அவ்வளவுதானே! எதற்கும் மன உறுதி வேண்டும்..." என்ருன், மாதவன்.

"சரி, தம்பி. இப்போது என் வயிறு கிள்ளுகிறது. மயக்கமாய் வருகிறது. ஏதாவது துட்டு இருந்

தால்........" என்று கெஞ்சினன், பிச்சைக்காரன்.

"தட்டா வேணும்...உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஆனாலும், உன் கையில் பணத்தைத் தரமாட்டோம். பீடி வாங்கிவிடுவாய்! வா, பக்கத்து ஓட்டலுக்குப் போவோம். இரண்டணாவுக்கு இட்டலி வாங்கித் தருகிறேன். தின்றுவிட்டு ஏதாவது வேலை கிடைத்தால் பார். பிச்சை எடுக்கிறது கேவலமான தொழில் இல்லையா? வேலை செய்யாமல் இருந்தால், உடம்பு கெடும்; சோம்பேறித்தனம் அதிகமாகும். என்ன, நான் சொல்லுகிறபடி கேட்கிறாயா? வா, ஓட்டலுக்கு" என்று அவனையும் மனோஹரனையும் அழைத்துக்கொண்டு அருகிலிருந்த ஓட்டலுக்குச் சென்றான், மாதவன்.

அங்கே இரண்டணாவுக்கு நாலு இட்டலி வாங்கி அந்தப் பிச்சைக்காரனிடம் கொடுத்தனர்.

"தம்பிகளா, நீங்கள் கடவுள் கிருபையால் சுகமாக இருக்க வேணும்" என்று வாழ்த்தியபடியேஇட்டலியைக் கையில் வாங்கிக் கொண்டான், பிச்சைக்காரன்.

"சொன்னது ஞாபகமிருக்கட்டும். இனி, பிச்சை எடுக்காதே. உடம்பை வளைத்து வேலை செய். இல்லாவிட்டால், நாங்கள் இப்போது உனக்காகச் செலவழித்த இரண்டணாவும் வீண்தான்! சோம்பேறிக்கு உதவுவதே மகா பாபம்!" என்றான், மாதவன்.

"சரி தம்பிகளா. இனி உழைத்துப் பிழைக்கிறேன்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டான், பிச்சைக்காரன்.



"ஏண்டா முரளி, நீ விளையாட வருகிறபோதெல்லாம் சட்டையைத் திருப்பிப் போட்டுக்கொண்டே வருகிறாயே! ஏண்டா இப்படி?"

"ஆமாண்டா, விளையாடுகிறபோது சட்டை அழுக்காகிவிடுகிறது. அப்படியே பள்ளிக்கூடத்துக்குப் போனால் சுத்தமாயில்லை. அதனாலே, விளையாடுகிறபோது இப்படித் திருப்பிப் போட்டுக்கொள்வேன்; பள்ளிக்கூடம் போகிறபோது நேராகப் போட்டுக் கொள்வேன்"

அவன் போன பிறகு, "மனோஹர், பார்த்தாயா சோம்பேறியின் வாழ்க்கையை!" என்றான், மாதவன்.

"அது சரி, சீக்கிரம் வா! ஸ்டேஷனில் உள்ள கடையை மூடிவிட்டால், துண்டு நோட்டீஸ் கட்டையும், வால் போஸ்டரையும் வாங்க முடியாது" என்றான், மனோஹரன்.

"சரி, சரி. வா, போவோம்" என்று இருவரும் சாந்திபுரம் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

ஊருக்கும், ரயில்வே ஸ்டேஷ

குறிப்பு—பெ. ஏழுமலை

னுக்கும் சுமார் ஒன்றரை மைல் தூரமிருந்தது. ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் பாதையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிறுசிறு குடிசைகள் இருந்தன. ஒரு குடிசைக்கும், இன்னொரு குடிசைக்கும் இடையே ஏறக்குறைய ஒரு 'பர்லாங்' தூரமாவது இருக்கும். எப்படித்தான் அவர்கள் அங்கு வசிக்கிறார்களோ? ஆண்டவனுக்கே அற்புதம்!

இன்னும் கொஞ்சதூரம் நடந்து சென்றால் ரயில்வே ஸ்டேஷன் நெருங்கிவிடும். அப்போது எங்கிருந்தோ, யாரோ தீனமான குரலில் அழும் ஓசை ஒன்று கேட்டது. உடனே, மனோஹரனும், மாதவனும் திடுக்கிட்டு நின்றனர்.

"மனோஹர், யாரோ அழுவது போலிருக்கிறதே! கேட்டாயா?" என்று மனோஹரனைப் பார்த்துக் கேட்டான், மாதவன்.

"ஆமாம், ஆமாம்! அதோ அந்தக் குடிசையிலிருந்துதான் யாரோ அழுவதைப் போலிருக்கிறது" என்றான், மாதவன். உற்றுக் கேட்டனர்.

"ஆம், அந்தக் குடிசையிலிருந்துதான் குரல் வருகிறது. பாவம் யாருக்கு என்ன கஷ்டமோ? வா, போய்ப் பார்ப்போம்" என்று அந்தக் குடிசையை நோக்கி முன்னால் நடந்தான், மாதவன். மனோஹரனும் அவன் பின்னால் தயங்கித் தயங்கிப் பயத்துடன் செல்லலானான்.

(தொடரும்)



இரண்டு பெண்டாட்டிக்காரர்

கருத்து : ஈசாப் பாடல் : அழ. வள்ளியப்பா

அற்புத சாமி நல்லவராம்.
அவர்க்கு இரண்டு மனைவியராம்.
மூத்தவள் அவரைக் காட்டிலுமே
மூன்று வயது முதிர்ந்தவளாம்.
இளையவள் அவரது வயதைவிட
எட்டு வயது குறைந்தவளாம்.

* * *

ஒருநாள் இளையவள் அவர்தலையை
உற்றுப் பார்த்தனள்; பார்த்ததுமே,
"ஐயோ, தலைமயிர் நரைக்கிறதே!
அனைவரும் என்ன சொல்லிடுவர்?
'கிழவரை மணந்த குமரி'யெனக்
கேலிதான் செய்வர். என்செய்வேன்?"
என்றே அவளும் எண்ணினளே.
இதற்கொரு வழியும் கண்டனளே.
தினமும் காலையில் அவர்தலையில்
தெரிந்திடும் நரைமயிர் சிலவற்றை
'வெடுக்கு வெடுக்'கெனப் பிடுங்கினளே.
வேதனையால்அவர் குதித்தனரே!

* * *

மூத்தவள் மட்டும் சளைத்தவளா?
மூளையைத் தட்டி விட்டனளே.
"எனது தலையில் பெரும்பகுதி
ஏற்கனவேயே நரைத்துளது.

என்றன் கணவரின் தலையுடனே
எனது தலையைப் பார்த்தவர்கள்
'வாலிப ரான கணவர்க்கு
வாய்த்தனள் நரைத்த கிழவி'யென
என்னைக் கேலி செய்திடுவர்.
இதற்கொரு வேலை செய்திடலாம்''
என்றே கருதினள். அதன்படியே,
எழுந்ததும் தினமும் அவர்தலையில்
கறுப்பாய் உள்ள மயிர்களையே
கருத்துடன் அகற்றிட லாயினளே!
தலையில் ஒருமயிர் பிடுங்கிடினும்
தாங்கிட நம்மால் முடிகிறதோ?
எப்படி அற்புத சாமியுமே
இதனைப் பொறுத்தனர்? யானறியேன்!
தினம்தினம் மனைவியர் இருவருமே
சிலசில மயிர்களை அகற்றியதால்
குறைந்தன; குறைந்தன. வெகுவிரைவில்,
மறைந்தன, தலைமயிர் யாவையுமே!
கத்திகள் எதுவும் இல்லாமல்
கைத்திறம் தன்னைக் காட்டியுமே
மொட்டை அடித்தனர் அவர்தலையை,
மூத்தவள் இளையவள் இருவருமே!
'சீப்பும் எண்ணெயும் இனிவேண்டாம்.
சிக்கன மாக வாழ்ந்திடலாம்'
என்றே அற்புத சாமியுமே
எண்ணிட வில்லை, அச்சமயம்!
'' இருவரை மணந்தேன். ஆதலினால்,
என்றன் தலையும், ஐயையோ!
பாலை வனமாய்ப் போனதுவே!
பட்டது போதும்!'' என்றனரே.



நான் படித்த புத்தகங்கள்

பேச்சுக்கலை

பேச்சு சுதந்திரம் வேண்டும் என்கிறோம்; கிடைக்கிறது. மேடையில் ஏறிப் பேச ஆரம்பிக்கிறோம். உடனே, கேட்க வந்திருப்பவர்களுக்கும் சுதந்திர தாகம் ஏற்படுகிறது. ஒவ்வொருவராக சுதந்திரத்துடன் எழுந்து வெளியே போய்விடுகிறார்கள். அது மாதிரி நடக்காதிருக்க வேண்டுமானால், நம் பேச்சுக்கு சுதந்திரம் மட்டுமல்ல; கட்டுப்பாடும் வேண்டும். அதனை நாமே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதன்படி நன்கு பழகவேண்டும். அப்பொழுதுதான் கேட்பவர்கள் நம் உணர்ச்சி வசப்படுவார்கள். நம்முடன் ஒத்துழைக்க முன்வருவார்கள்.

பேசுவதே ஒரு கலை. அதை இப் புத்தகத்தின் மூலம் ஆசிரியர்கள் **கே. வீ. வீரராகவன்** அவர்களும், **அன்பு பழம்நீ,** அவர்களும் மிக மிக அழகாக இருபத்து ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கூறியிருக்கிறார்கள். உலக மேதைகள் பலரின் அறிவுரைகளையும்எடுத்துக் காட்டியுள்ளார்கள். இக்கலையைப் பயில விரும்பும் ஒவ்வொரு மாணவனுக்கும் இது ஓர் அருமையான புத்தகம். 80 பக்கங்கள்; விலை ரூபாய் ஒன்று. வெளியிட்டோர்: **நவயுகப் பதிப்பகம், சென்னை-4.**

துடிப்புள்ள இளைஞன்

'சுறு சுறுப்பா யிரு; ஆனால் படபடப்பா யிராதே!'

'வீறுபெற்று நில்லடா; விதியை மீறிச் செல்லடா!'

'உலகைச் சீர் செய்தல் உன் கடமை. நீ வாழ்க! உன் கொள்கை வளர்க! உன் தொண்டு வெல்க!'

'எவரையும் வையாதே. வைவது தமிழனின் பண்பற்று'

இம்மாதிரியான பொன்மொழிகளை — நம் நாட்டு அறிஞர்கள் பலரின் மணி மொழிகளைத் துணையாகக்கொண்டு இப் புத்தகத்தின் மூலம், துடிப்புள்ள ஒவ்வொரு இளைஞனுடனும் பேசுகிறார், ஆசிரியர் **பழம்நீ** அவர்கள். வருங்கால மக்களாகிய இக்கால இளைஞர்கள் இதனைப் படித்து உணர்ந்தால், நிச்சயம் பயனுண்டு. விலை அணா 4. வெளியிட்டோர்: **நியூ இந்தியா புக் அவுஸ், இராமச்சந்திரபுரம், P.O., திருச்சி ஜில்லா.** —**'தணிகை'**

கேளுங்கள்: பதில் சொல்லுகிறோம்

○ ஒருநாள் இரவு நேரத்தில் ஊசியையும், நூலையும் எடுத்து என் கிழிந்துபோன சட்டையைத் தைக்கப் போனேன். உடனே, என் அம்மா, 'இரவிலே தைக்கக்கூடாது. தோஷம்' என்றாள். நிஜமாகவே தோஷமா?

—T. ஆனந்தன், மதுரை

தோஷம் ஒன்றுமில்லை. ஆயினும், உன் அம்மா சொன்னது நன்மைக்குத்தான். இரவிலே வெளிச்சம் நன்றாகத் தெரியாது. அதனால், தைக்கும்போது ஊசி தவறிக் கையிலே குத்திவிடலாம். இப்படிக் காரணத்தைக் கூறாமல், அல்லது காரணம் தெரியாமல் 'தோஷம்; சாத்திரம்' என்று கூறுவது சிலருக்கு வழக்கமாகி விட்டது.

○ ராஜாஜியின் வீட்டு விலாசம் என்ன? அவரை நான் பார்த்துப் பேச முடியுமா?

—என். ராகவன், சென்னை 5

தியாகராய நகரிலுள்ள பஸ்லுல்லா ரோடு 60-ம் எண் வீட்டில் அவர் வசிக்கிறார். முக்கியமான வேலையாக இருந்தால்தான், அவர் பேட்டி அளிப்பார். அதுவும், முன்னதாகவே அவருக்கு விஷயத்தை அறிவிக்கவேண்டும். பின்னர், நேரம் குறிப்பிடப்படும். அந்த நேரத்தில் அவரைச் சந்திக்கலாம்.

○ மாடு, குதிரைகளை வண்டியில் போட்டு ஓட்டுவதுபோல், கழுதையையும் வண்டியில் கட்டி ஓட்ட முடியுமா?

—R. வெங்கட்ரமணன், புத்தூர்

என் முடியாது? பாகிஸ்தானில் மாட்டுவண்டி, குதிரை வண்டிகளைப் போல் கழுதை வண்டிகளும் ஏராளமாக இருக்கின்றன! கராச்சியில் மட்டும் 2000 கழுதை வண்டிகள் இருக்கின்றனவாம். கழுதை வண்டிக்காரர் சங்கம்கூட இருப்பதாகக் கேள்வி!

○ நம் தேசத்தில் எங்கு எங்கு துறைமுகங்கள் இருக்கின்றன?

—N. பஞ்சாபகேசன், விழுப்புரம்

கல்கத்தா, பம்பாய், சென்னை, கொச்சி—இந்த நான்கும் பெரிய

துறைமுகங்கள். இவை தவிர தூத்துக்குடி, தனுஷ்கோடி, நாகப்பட்டினம், மங்களூர், கள்ளிக்கோட்டை, ஆலப்புழை, தலைச்சேரி, கொல்லம், காகிநாடா, மசூலிப்பட்டினம், விசாகப்பட்டினம், சூரத், கட்டாக், பவநகர் இப்படிப் பல சிறு துறைமுகங்களும் இருக்கின்றன.

○ சிறு குழந்தைகளுக்குப் பசும்பால் கொடுப்பது நல்லதா? எருமைப்பால் கொடுப்பது நல்லதா?

—T. வேதவல்லி, சென்னை 4

பசும்பால்தான் நல்லது. எருமைப்பால் சீக்கிரத்திலே ஜீரணமாகாது.

○ 'இன்று தமிழ்த் தேதி என்ன?' என்று ஒருநாள் எங்கள் தமிழாசிரியர் கேட்டார். வகுப்பில் ஒருவருக்குக்கூட விடை தெரியவில்லை; விழித்தார்கள். இந்தமாதிரித் தமிழ்த் தேதியே தெரியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

—C. சம்பந்தன், மதுரை

உன் வகுப்புப் பையன்களுக்குத் தமிழ்த் தேதி மட்டும்தானே தெரியவில்லை? பலருக்கு இது என்ன தமிழ் வருஷம், என்ன தமிழ் மாதம் என்பது கூடத் தெரியாமலிருக்கிறது. இதற்குக் காரணம் வேறொன்றுமல்ல. தற்போது பள்ளிக்கூடங்கள், பத்திரிகைகள், காரியாலயங்கள் எல்லாவற்றிலுமே ஆங்கிலத் தேதிகளைத்தான் உபயோகித்து வருகிறார்கள். அத்துடன், நாம் பார்க்கும் 'காலண்டர்'களில் பெரும்பாலானவை ஆங்கிலத் தேதிகளையே காட்டுகின்றன. ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தியிருந்த காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களில் இதுவும் ஒன்று.

○ இந்தியாவில் தற்போது எத்தனை தினசரிப் பத்திரிகைகள் இருக்கும்?

—என். கோபால், திருப்பதி

மொத்தம் 578 தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. தினந்தோறும் சுமார் 30 லட்சம் பிரதிகள் செலவாகின்றன. ஆனால், இது 1951-ம் வருஷம் எடுக்கப்பட்ட கணக்கு. தற்போது கொஞ்சம்கூடக் குறைய இருக்கலாம்.

○ 'பூஞ்சோலை'யில் சிரிக்கச் சிரிக்கக் கட்டுரை எழுதும் மிஸ்டர் இளிச்சவாயனின் உண்மைப் பெயர் என்ன?

—ம. விஜயராகவன், சென்னை 4

இளிச்சவாயன் இப்போது இருக்குமிடம் நீ வசிக்கும் சென்னை மாநகரமே. ஊரைச் சொன்னாலும், உண்மையான பெயரைச் சொல்லக்கூடாது. இது ம-ா-ா-ஸ்ரீ இளிச்சவாயன் அவர்களின் கண்டிப்பான உத்தரவு! ஆமாம், நான் சொல்லமாட்டேன்; சொல்லமாட்டேன்; சொல்லவே மாட்டேன்!

○ என் தம்பி மூன்றுவது படிக்கிறான். எந்தப் பத்திரிகையை வாங்கிக் கொடுத்தால் அவனுக்குப் பிரயோசனமாக இருக்கும்?

—R. S. ஞானம், கீரனூர்

மூன்றுவது படிக்கும் பையனுக்குப் புரியும்படியாகத் தற்போது எந்தப் பத்திரிகையுமே வெளி வரவில்லை. அப்படி ஏதே

னும் ஒரு பத்திரிகை வெளிவந்தாலும், அதில் ஒரு கதை அல்லது இரண்டு கதைகளைத்தான் அவன் படித்துப் புரிந்து கொள்ளலாம். எல்லாமே புரிந்துவிடும் என்பதற்கில்லை.

○ மத்தியான வேளையில் சாப்பிட்டவுடன் விளையாடலாமா?

—ந. கண்ணன், கு. செல்வரங்கம், சென்னை 7

கூடாது. உஷ்ணம் அதிகமாக உள்ள நம் நாட்டில் காலை மாலை இரண்டும்தான் விளையாடுவதற்கு ஏற்ற நேரங்கள்.

○ நம் நாட்டில் எங்கெங்கு மண்ணெண்ணெய் கிடைக்கிறது?

—ரதியரசு, திண்டுக்கல்

அஸ்ஸாம் மாகாணத்தில் உள்ள திக்பாய் என்ற இடத்தில் மட்டுமே மண்ணெண்ணெய் கிடைக்கிறது.

○ ஒரு பொருளின் உண்மையான விலையை வியாபாரி சொன்னாலும், அந்த விலைக்கும் குறைத்துக் கேட்கும் பழக்கம் நம் நாட்டில் இருக்கிறதே, ஏன்?

—எஸ். நவாப்ஜான், காரைக்குடி

ஆரம்பத்தில் அதிக விலை கூறிப் பிறகு குறைத்துக் கொடுக்கும் வழக்கம் இன்னும் சில வியாபாரிகளிடம் இருப்பதால்தான்!

○ சில தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளின் அடியில் பி. டி. ஐ., ராய்ட்டர் என்று போடுவதன் காரணம் என்ன?

—செ. யோகநாதன், யாழ்ப்பாணம்

தினசரிப் பத்திரிகைகளுக்குச் செய்திகளைச் சேகரித்துக் கொடுக்கப் பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பி. டி. ஐ., ராய்ட்டர், குளோப் முதலியவைகளெல்லாம் அந்த மாதிரி ஸ்தாபனங்களே.

○ மனிதனுக்குக் குணம் அவசியமா? பணம் அவசியமா?

—V. சீனிவாசன், சேலம்

குணம் இல்லாதபோனால், பணம் நில்லாது!

○ குறுக்கு வார்த்தைப் போட்டிகளில் மாணவர்கள் ஈடுபடலாமா?

—சு. தனபாலன், திருச்சி

ஈடுபடலாம், கட்டண மில்லாத போட்டியாக இருந்தால்!

★

குழந்தை எழுத்தாளர் சங்கம்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் 3-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் விஜய வருடப் பிறப்பன்று (13-4-53 திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் (135, பவளக்காரத் தெரு) நடைபெறும்.

குழந்தைகளுக்காக எழுதுவோர் அனைவரும் இச்சங்கத்தில் அங்கத்தினராகலாம். சித்திரை மாதம் முதல் புது அங்கத்தினர்கள் சேர்க்கப்படும். வருட சந்தா ரூபாய் 1-8-0. மேலும் விவரங்களுக்கு சங்கக் காரியதரிசிக்கு எழுதலாம்.

இளிச்சவாயன் எழுதுகிறான்

ஆஸ்பத்திரியில் ஒரு வாரம்!

டாக்டர்களிடம் கையைக் காட்டுவதென்றாலே எனக்கு ஒரே பயம்தான்!

'இப்போது எந்த டாக்டர் கையைக் காட்டச் சொல்கிறார்? 'நாக்கை நீட்டு! மூக்கைக் காட்டு! முகத்தைத் திருப்பு! மூச்சை இழுத்து விடு!" என்றுதானே பெரும்பாலான டாக்டர்கள் சொல்கிறார்கள்' என்கிறீர்களா? அதுவும் சரிதான்! டாக்டரிடம் போவதற்கு நான் ஏன் பயப்படுகிறேன், தெரியுமா? காரணத்தோடுதான்.

யுத்தகளத்தில் ஒரு டாக்டர் வேலை பார்த்து வந்தாராம். அவருடைய வேலை என்னவென்றால், இறந்து போனவர்களை விட்டுவிட்டுக் காயமடைந் திருப்பவர்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டியதுதானாம்.



ஒருநாள் அந்த டாக்டர் தம்முடைய உதவி ஆளுடன் காயமடைந்தவர்கள் இருந்த இடத்துக்குப் போனாராம். ஒவ்வொருவராகப் பரிசோதித்துக் கொண்டே வந்தாராம், ஒரு சிப்பாயைப் பார்த்ததும், "இந்த ஆள் செத்துப் போய்விட்டான். இந்தப் பிணத்தைத் தூக்கி அப்பாலே போடச் சொல்" என்று தம்முடைய உதவி ஆளிடம் சொல்லிவிட்டு மேலே போய் விட்டாராம்!

'டாக்டர் சொல் மிக்கதோர் மந்திரமில்லை' என்று நினைப்பவர் அந்த உதவி ஆள். ஆகையால், உடனே அவர் காயமடைந்திருந்த அந்தச் சிப்பாயைத் தூக்கிச் சவக் கிடங்கிற்குள் போடும்படி அங்கிருந்த வேலையாட்களுக்கு உத்தரவிட்டாராம்.

அப்போது, "ஐயா, ஐயா! நான் சாகவில்லை! உயிரோடுதான் இருக்கிறேன்!" என்று அந்தக் காயமடைந்திருந்த சிப்பாய், டாக்டரின் உதவி ஆளைப் பார்த்துக் கத்தினானாம்.

உடனே அந்த

உதவி ஆள், "அட சட், வாயை மூடு! நீ செத்துப்போய் விட்டாய் என்று டாக்டரே சொல்லி விட்டார். அப்புறம், நீ என் அனுவசியமாகக் கத்துகிறாய்? எய், என் வேடிக்கை பார்க்கிறீர்கள்? இந்தப் பிணத்தைத் தூக்கிப் போய் சவக்கிடங்கில் போடுங்கள்" என்று வேலையாட்களைப் பார்த்துச் சொன்னாராம். அதற்குப் பிறகு அந்தச் சிப்பாயை சவக்கிடங்கிற்குக் கொண்டு போனார்களா அல்லது சுடுகாட்டுக்குத் தூக்கிப் போனார்களா என்ற விஷயமும், சுடுகாட்டில் குழி வெட்டி அந்தச் சிப்பாயைப் புதைத்தார்களா அல்லது எரித்தார்களா என்ற விவரமும் எனக்குத் தெரியாது.

இந்தச் செய்தியை அன்று ஒரு நாள் பத்திரிகையில் படித்ததிலிருந்தே, எனக்கு டாக்டரிடம் செல்வதென்றால் நடுக்கம்தான்! யார் கண்டது, என்னைப் பரிசோதனை செய்யும் டாக்ருடம் அந்த 'மிலிடெரி' டாக்டரைப்போல் நான் செத்துப் போய்விட்டதாகக் கூறிவிட்டால், அப்புறம் நான் எப்படி இந்த உலகில் நடமாடுவது? (நடனமாடுவது என்று கூறவில்லை. அந்த வேலை என் அக்காளுக்குத்தானே தெரியும்!) அப்புறம், எப்படி நான் எழுத வேண்டியதையெல்லாம் எழுதி உங்கள் பொறுமையைச் சோதனை செய்வது?

ஆனாலும், நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடந்துவிடுகிறதா, என்ன? டாக்டரிடம் போய் உடம்பை ஒரு முறை காட்டுவதற்கே தொடை நடுங்கிக் கொண்டிருந்த நான், ஒரு வாரம் முழுதும் ஆஸ்பத்திரிக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கவேண்டிய கட்டாயம் நேர்ந்துவிட்டது! அது எப்படி?

"சரிதான், இந்த இளிச்சவாய்ப் பயல் பத்திரிகைகளில் தன் பெயர் வெளிவர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தானே, அதற்காக எங்கேயாவது காரில் கீரில், அல்லது வண்டியில் கிண்டியில் (சென்னைக்கு அருகே குதிரைப் பந்தயம் நடக்கும் கிண்டி என்ற ஊரை இங்கே குறிப்பிடவில்லை என்று என் தலையிலேயே அடித்துச் சத்தியம் வேண்டுமானாலும் செய்யத் தயார்!) மாட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டானோ?" என்று உங்களில் பலர் என்னைப்பார்த்து—என்னை எங்கே உங்களால் பார்க்கமுடியும்?—உங்கள் நண்பர்களைப் பார்த்தோ அல்லது உங்கள் எதிரே இருக்கும் சுவரைப் பார்த்தோ, அதுவும் இல்லாவிட்டால் கூரை முகட்டைப் பார்த்தோ கேட்பீர்களென்று நினைக்கிறேன்.

அன்று காலையில் எழுந்ததுமே என் மனசு சரியாயில்லை. "பள்ளிக்கூடம் போனதும் 'வீட்டுக் கணக்குப் போட்டாயா? எங்கே எடு நோட்டுப் புத்தகத்தை?' என்று கணக்கு வாத்தியார் கணபதிராயர் கேட்பாரே; என்ன செய்வது?",

என்ற பயம் தோன்றியது. அக்கம் பக்கத்து வீடுகளில் என் வகுப்புப் பையன்கள் யாராவது இருந்தாலும், அவர்கள் போட்டு வைத்திருப்பதைப் பார்த்து அப்படியே ஒரு 'நகல்' எடுத்துக்கொள்ளலாம். அதற்கும் வழியில்லை. ஒருவர்கூட எங்கள் தெருவில் இல்லை.

அடுத்த தெருக்கோடியில் 'அழகிரி' என்றபெயருடையவன் ஒருவன் இருக்கிறான். ஆனால், அவன் நிச்சயம் எனக்கு உதவமாட்டான். சுத்தக் கருமிப்பயல்! போனவாரம் நான் வேர்க்கடலை வாங்கித் தின்று கொண்டே வந்தபோது அவன் கொஞ்சம் கேட்டான். நான் கொடுக்காததால் என்மேல் அவனுக்கு ஆத்திரம்! அவனிடம் நான் போய் இப்போது கேட்கலாமா? கேட்டாலும் அவன் உதவி செய்வானா? உதவி செய்தாலும், பிறகு வாத்தியாரிடம் என் திருட்டுத் தனத்தைக் கூறி எனக்கு அடி வாங்கித் தராமல் விடுவானா?

யோசனை செய்தேன்; செய்தேன்; அரைமணிநேர யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன்.

அந்த முடிவின்படி, திடீரென்று "அம்மா! அம்மா! வயிற்றை வலிக்குதே!" என்று கூறிக்கொண்டே வயிற்றைப் பிடித்துக்கொண்டு அம்மாவிடம் ஓடினேன். பாவம், அம்மா என் நடிப்பைப் புரிந்துகொள்ளாமல் கொஞ்சம் விளக்கெண்ணெயை எடுத்துவந்து என் வயிற்றிலே நன்றாகத் தேய்த்துவிட்டாள். அப்படியும் என் வயிற்று வலி தீரவில்லை. (எப்படித் தீரும்? உண்மையாக இருந்தால்தானே!)

அதற்குள் என் அப்பா பக்கத்தில் வந்துவிட்டார். அவர் என் நடிப்புக் கலையைப் புரிந்துகொண்டு விட்டாரோ, என்னவோ! "எல்லாம் பள்ளிக்கூடம் போனால் சரியாய்விடும்" என்று அலட்சியமாகக் கூறிவிட்டார்.

வேறு வழியில்லாததால், அன்று வயிற்றைப் பிடித்துக்கொண்டே பள்ளிக்குச் சென்றேன். முதல் 'பீரியடு' ஆங்கிலப் பாடம். அடுத்தது, கணக்கு வகுப்பு.

கணக்கு வாத்தியார் வந்தார். அவரைக் கண்டதுமே என் பயம் அதிகரித்து விட்டது. அத்துடன், என் வயிற்று வலியும் அதிகரித்து விட்டது!

இருந்தாற் போலிருந்து, "ஆ! ஐயோ! ஐயோ!" என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு பள்ளிக்கூடமே கிடுகிடுக்கும்படி அலறினேன்; அலறிக் கொண்டே குதித்தேன். என் சப்தத்தைக் கேட்டு எல்லோரும் நடு நடுங்கிவிட்டனர். கணக்கு வாத்தியாரே நடுங்கிவிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சற்று நேரத்துக்குள் பள்ளிக்கூடத்திலுள்ள அத்தனை பேரும்—தலைமை ஆசிரியர், 'பியூன்' பீதாம்பரம் உள்பட— அருகே வந்து பரிதாபத்துடன் என்னைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

நான் விடாமல், "ஐயோ, வயிற்று வலி தாங்க முடியவில்லையே! உயிர் போகுதே! ஐயோ! ஐயோ!! ஐயோ!!!" என்று அலறிக்கொண்டே இருந்தேன்.

'என்னைப் பார்த்து அவர்கள் பரிதாபப் படுவார்கள்; உடனே, ரிக்ஷாவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். கணக்கு வாத்தியாரின் கைப் பிரம்புக்கு வேலை கொடுக்காது போய் விடலாம்'' என்பதே என் எண்ணம். ஆனால், நடந்ததோ வேறு விதம்!

தலைமை ஆசிரியர் உடனே என் அப்பா அம்மாவுக்கு ஆள் அனுப்பி விட்டு, ஆஸ்பத்திரிக்கும் தகவல் கொடுத்து ஒரு டாக்டரை அனுப்பச் சொல்லி விட்டார்.

அலறி அடித்துக் கொண்டு அப்பா அம்மா ஓடிவருவதற்கும், ஆஸ்பத்திரி டாக்டர் வந்து சேருவதற்கும் சரியாக இருந்தது.

டாக்டர் என்னைச் சோதனை செய்து பார்த்துவிட்டு, "குடலில் ஏதோ ஒட்டை ஏற்பட்டிருக்க வேண்டும். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்த்தான் பார்க்க வேண்டும்'' என்றார்.

இதைக் கேட்டதும், என் அம்மா, "என்ன, குடலில் ஓட்டையா! ஆஸ்பத்திரிக்கா கொண்டு போக வேண்டும்?" என்று அழுது கொண்டே கேட்டாள்.

"ஆமாம், பையனை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள்! என்ன இருந்தாலும் ஆஸ்பத்திரி சௌகரியம் வீட்டிலே வராது. ஆஸ்பத்திரியிலே வேளா வேளைக்கு மருந்து, சாப்பாடு எல்லாம் ஒழுங்காக நடக்கும். அதைப்போல வீட்டிலே இருக்குமா?" என்று என் பக்கத்திலிருந்த தமிழாசிரியர் தம்முடைய கருத்துரையை அப்பாவிடம் தெரிவித்தார்.

"பையனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிக் கொல்லவா பார்க்கிறீர்கள்?" என்று அம்மா அலுப்புடன் கூறினாள்.

அதற்குள், என் அருகில் நின்ற ஒரு பிரஹஸ்பதி, 'ஆஸ்பத்திரிக்கு அனுப்பி ஏன் இவனைச் சாகடிக்கிறீர்கள்? வீட்டிலேயே ——'' இதற்கு மேல் அவன் கூறியதை நான் எழுதத் தயாராயில்லை. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து பழக்கப் பட்ட உங்களுக்கு இதைப் புரிந்துகொள்ள வெகு நேரம் பிடிக்காது என்றே நினைக்கிறேன்.

அதே சமயம் அங்கிருந்த அழகிரி "இந்தப் பயலுக்கு நன்றாக வேண்டும். என்னைப் பார்க்கவைத்துக் கொண்டு அன்றைக்கு வேர்க்கடலை தின்றானே! அதுதான் வயிற்றை வலிக்குது'' என்று சொன்னதும் என் காதில் விழாமல் இல்லை. எனக்கு இருந்த ஆத்திரத்தில் அவனை அந்த இடத்திலே தீர்த்துக் கட்டியிருப்பேன். ஆனால், என் நடிப்புக் கலை வெளியாகி விடுமே

என்று நினைத்துத்தான் சும்மா இருந்து விட்டேன்.

எப்படியோ என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கே போனதும் பெரிய டாக்டர் என்னைச் சோதனை செய்து பார்த்தார். பிறகு என் அப்பாவைப் பார்த்து "என்னய்யா இது! நோயை இப்படி முற்றவிடலாமா? இவனை இங்கேயே விட்டுவிட்டுப் போங்கள்! நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

அப்பா கொஞ்நேரம் தயங்கினார். அம்மா என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறிவிட்டாள்.

"அதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் டாக்டர்.

அப்புறம்...? அப்புறம் நடந்ததை அடுத்த இதழில் கூறி முடித்து விடுகிறேன்.

★

மதுரைக் கட்டுரை

மதுரையைப்பற்றிய கட்டுரைப்போட்டிக்கு இதுவரை 35 பேர்களே எழுதியனுப்பி யிருக்கிறார்கள். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை குறுக்கே வந்ததால், கட்டுரை எழுத நேரமில்லை என்று பல எஸ். எஸ். எல். ஸி. மாணவர்கள் எழுதியிருக்கிறார்கள். அத்துடன், முடிவு தேதியை ஒத்திப் போட்டால் இன்னும் பலர் கலந்துகொள்ள முடியும் என்றும் சிலர் எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் விருப்பப்படியே மதுரையைப்பற்றிய கட்டுரைப் போட்டியின் முடிவு தேதியை ஒத்திப்போட்டிருக்கிறோம். எற்கனவே கலந்துகொள்ளாத மதுரைத் தம்பிகளும், தங்கைகளும் இப்போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம். ஆனால், அவர்கள் தங்கள் கட்டுரைகளை, தபால் செலவு செய்து இங்கே அனுப்பவேண்டும்என்ற கட்டாயமில்லை. மதுரையிலேயே ஓர் இடம் குறிப்பிட்டுள்ளோம். அங்கேயே கொடுத்துவிடலாம். 20-4-53 க்குள் கொடுத்துவிட வேண்டும். எற்கனவே வந்துள்ள கட்டுரைகளையும் மதுரைக்கே அனுப்பப்போகிறோம். அங்கு சிலர் பஞ்சாயத்தாராக இருந்து கட்டுரைகளைப் பரிசீலனை செய்து முடிவு கூற இசைந்திருக்கிறார்கள்.

மதுரையில் கட்டுரை கொடுக்கவேண்டிய இடம் :

வாசன் புத்தக நிலையம்
60, மேலக் கோபுரவாசல்,
மதுரை



ராஜுவின் மோட்டார்

நா.கி.நாகராசன்

ராஜுவின் மாமா சென்ற மாதம் பர்மாவிலிருந்து வந்த போது ஒரு சிறிய மோட்டார் வாங்கிக் கொண்டு வந்தார். அதை ஓட்ட ராஜு நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டான். பள்ளிக்கூடம் போகும் நேரத்தைத் தவிர, மற்ற நேரமெல்லாம் அவன் அதை ஓட்டிக் கொண்டிருப்பான்.

ராஜுவின் தங்கை கமலத்திற்கும் அதை ஓட்டவேண்டும் என்று ரொம்ப ஆசை. ஆனால், அவளுக்கு மூன்று வயதுகூட ஆகவில்லை. அவளால் அதை ஓட்ட முடியுமா?

"அண்ணா, நானும் கொஞ்சம் மோட்டாரை ஓட்டிப் பார்க்கிறேன்" என்று அவள் கேட்டாள்.

"ஆமாம், உனக்கு அதை ஓட்ட முடியுமாக்கும்? சின்னவர்கள் எல்லாம் மோட்டார் ஓட்டக் கூடாது" என்று ராஜு சொன்னான்.

சிறியவர்கள் ஏன் மோட்டார் ஓட்டக் கூடாது என்று கமலத்திற்குப் புரியவில்லை. ராஜுவின் மோட்டார் வேகமாக ஓடுவதை அவள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவர்களது மாமா ராஜுவைப் பார்த்துக் கேட்டார். "ஏன் ராஜு, கமலம் ரொம்பச் சின்னவள். அதனால், அவள் மோட்டாரை ஓட்டக்கூடாது என்கிறாயே. அவளைவிடச் சிறிய பிராணிகள் பெரிய பெரிய எந்திரங்களையே ஓட்டுகின்றன, தெரியுமா?"

ராஜு மாமா சொன்னதை நம்பவில்லை. "போங்கள் மாமா, நீங்கள் ஏதாவது 'சர்க்கஸ்' வேடிக்கையைப் பற்

றிச் சொல்கிறீர்களோ, என்னவோ! சர்க்கஸில்தான் குருவி துப்பாக்கி சுடும்; நாய் சைக்கிள்விடும். நீங்கள் எந்தப் பிராணியைப் பற்றிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

மாமா சிரித்தார். "போடா போ. நான் சொன்ன பிராணிகள் நாயையும் குருவியையும்விட எவ்வளவோ சிறியவை. அவை கண்ணுக்கே தெரியாது! நீ உன் பள்ளிக்கூடத்தில் கிருமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

ராஜு படிப்பில் கெட்டிக்காரன். அவனுக்கா கிருமிகளைப் பற்றித் தெரியாது? அவன் உடனே பதில் சொன்னான். "ஓ, எனக்குத் தெரியுமே! கிருமிகள் என்பவை நமது கண்ணுக்கே தெரியாத அளவு சிறிய பிராணிகள். அவை காலரா, மலேரியா முதலிய பல நோய்களை விளைவிக்கின்றன. ஆகையால், கிருமிகளை அழிக்க வேண்டும். அவை நம் பகைவர்கள்'' என்று பாடத்தை ஒப்புவித்து விட்டான்.

"கிருமிகள் நமது பகைவர்கள் என்று நீ சொல்வது உண்மைதான். ஆனால், சில கிருமிகள் நமக்கு நல்ல நண்பர்கள். அவை நமக்கு எவ்வளவோ வகைகளில் உதவி செய்கின்றன. இந்தக் கிருமிகள்தாம் உன் மோட்டாரை விடப் பெரிய எந்திரங்களை ஓட்டுகின்றன!'' என்று மாமா சொன்னார்.

ராஜு அவரை விடவில்லை.

"அதெப்படி மாமா, அவ்வளவு சிறிய கிருமிகளால் எந்திரத்தை ஓட்ட முடியும்?'' என்று கேட்டான்.

மாமா விவரமாகச் சொல்ல ஆரம்பித்தார். "அது இருக்கட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல். சாக்கடையும், குப்பைமேடும் ஏன் நாற்ற மடிக்கின்றன? சொல், பார்ப்போம்'' என்றார்.

"அங்கெல்லாம் பல பொருள்கள் அழுகிக்கொண்டிருக்கும். அதனால், அவை

ஒரே யடியாக நாற்றமடிக் கின்றன'' என்று அவன் பதில் சொல்லிவிட்டான்.

"பொருள்கள் அழுகிப் போவதற்குக் கிருமிகளே காரணம். அழுகும் பொருள் களைத் தின்று அவை உயிர் வாழ்கின்றன. இதனால், அப் பொருள்களி லிருந்து பல கெட்ட நாற்றமுள்ள வாயுக் கள் வெளியே வருகின்றன. இந்த வாயுக்களைச் சேகரித்து வைத்து பெட்ரோலுக்குப் பதிலாக மோட்டார் ஓட்டப் பயன்படுத்த லாம். மின்சாரத்தைத் தயாரிக்கப் பெரிய எந்திரங்கள் பயன் படுகின்றன அல்லவா? இந்த எந்திரங் களை ஓட்ட அழுகும் பொருள்களிலிருந்து வரும் வாயுவைப் பயன்படுத் துகிறார்கள்.

"இதைப்பற்றி ஒரு சிறிய கதை சொல்கிறேன், கேள். ஹாலந்து தேசத்தில் ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை இருந்தது. காகிதம் செய்ய மரச் சக்கை பயன்படுகிறது என்பதுதான் உனக்குத் தெரியுமே! தொழிற் சாலையில் மரத்தைப் பயன் படுத்துவ தால் ஏராளமாகக் குப்பை கூளங்கள் சேர்ந்துவிட்டன. அதை யெல்லாம் பக்கத்தி லிருந்த ஆற்று நீரில் கொட்டி விடுவது வழக்கம். ஆற்று நீர் இதனால் அசுத்தமாகி விட் டது. இப்படிச் செய்யக் கூடாது என்று கட்டளை போட்டு விட்டார்கள். தொழிற்சாலையின் சொந்தக் காரருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பெரிய கிணறுகள் தோண்டி அந்தக் கிணறுகளுக்குள் இந்தக் குப் பைகளை எல்லாம் கொட்டி மூடிவிட்டார். குப்பை அழுகி ஏராளமான வாயுக்கள் வெளி வந்தன. இந்த வாயுக் களைக்கொண்டு அவர் தொழிற் சாலையில் இருந்த எந்திரங் களை எல்லாம் ஓட்டத் தொடங்கினார்.

"இதற்கு முன்னால் அவர் நிலக்கரியையும், பெட்ரோல் எண்ணெயையும் விலை கொடுத்து வாங்கி எந்திரங் களை ஓட்டப் பயன்படுத்தி னார். இப்போது, அவருக்கு அந்தச் செலவே இல்லாமல் போய்விட்டது! மின்சாரத் தைத் தயாரிக்கவும் அவர் இந்த வாயுக்களைப் பயன்படுத் தித் தொழிற்சாலையில் எங்கே பார்த்தாலும் ஜோராக விளக் குப்போட்டுவிட்டார். குப்பை

களை ஆற்றில் கொட்டக் கூடாது என்று கட்டளை வந்தது அவருக்கு நன்மையாகவே போய்விட்டது! இப்போது தெரிந்ததா, கிருமிகளிலும் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என்பது?

"சென்னை ஒரு பெரிய நகரம். அந்த நகரத்தில் ஒரு நாளைக்குச் சேரும் சாக்கடை நீரை ஒரு பெரிய ஏரிக்குள் விட்டால் அது அப்படியே நிறைந்து போகும். அவ்வளவு அதிகம்! அதையெல்லாம் தேக்கிவைத்து அதிலிருக்கும் பொருள்கள் அழுகுவதால் தோன்றும் வாயுக்களைக் கொண்டு சென்னை நகரத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும், தெருக்களுக்கும் தேவையான சக்தியைத் தயாரிக்கலாம்.

"ஜெர்மனி தேசத்தில் ஒரு பெரிய நகரத்தில் இப்படித்தான் செய்கிறார்கள். நமது தேசத்தில்கூட வாழைப் பழத் தோலை அழுக வைத்துப் பெட்ரோலைப் போன்ற எண்ணெயைத் தயாரித்து மோட்டாரை ஓட்டப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆகையால், ஒரு பொருள் அழுகும் போது அது நாற்றமடிக்கிறது என்பதை மட்டும் நீ தெரிந்துகொண்டு அதன்மேல் வெறுப்புக் கொள்ளக் கூடாது. நமக்கு ஒருவகையில் அது பயன்படுகிறது என்

அகில உலகக்
குஸ்திச் சண்டை வீரர்
குடு குடு சிங்.

பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று மாமா சொல்லி முடித்தார்.

அப்போது, தெருவிலுள்ள சாக்கடையை ஒருவன் வந்து சுத்தம் செய்துவிட்டுப் போனான். அதன் நாற்றம் பொறுக்க முடியவில்லை!

"ராஜு, உன் மோட்டாரை ஓட்ட இந்த வாயு பயன்படுமா என்று பார்" என்று மாமா கேலி செய்தார்.

"போங்கள் மாமா. என் மோட்டார் இந்த நாற்றத்தில் தான் ஓடவேண்டுமா? அதை நானே ஓட்டிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் மோட்டார் ஓட்டப் போய்விட்டான், ராஜு.

1

2



3

4

திருக்குறள்

பரிசு

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிந்துவிட்டது. மற்றப் பரீட்சைகளும் விரைவில் முடியப்போகின்றன. கோடை விடுமுறையை நீங்கள் நல்லவிதத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்தப் போட்டியும் ஓரளவு உதவியாயிருக்கும்.

இங்கே 8 படங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறள் சம்பந்தப்பட்டது. இந்த எட்டுப் படங்களுக்கும் சம்பந்தமுள்ள எட்டுக் குறளையும் கண்டுபிடித்துத் தவறு இல்லாது எழுதி அனுப்பவேண்டும்.

'இது எப்படி முடியும்? குறளில் மொத்தம் 1330 பாட்டுக்கள் இருக்கின்றன! அவைகள் எல்லாவற்றையும் நாங்கள் படித்திருக்க முடியுமா? படித்திருந்தாலும், ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியுமா? ஞாபகத்தில் இருந்தாலும், எந்தப் படத்துக்கு எந்தக் குறள் என்று எழுதி அனுப்ப முடியுமா?' என்று சிலர் கேட்பது காதில் விழாமலில்லை!

திருக்குறளில் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என்று 3 பிரிவுகள் இருக்கின்றன. இது உங்களுக்குத் தெரிந்ததே. ஆனல், நாங்கள் 'காமத்துப் பால்' என்ற பகுதியை ஒதுக்கிவிட்டோம். அறத்துப் பால், பொருட்பால் இரண்டிலும் உள்ள மொத்

போட்டி

ரூ. 15/-

தப் பாடல்கள் 1080. அந்த 1080 பாட்டுக்களுக்குள்ளேதான் இந்த எட்டுப் பாட்டுக்களும் இருக்கின்றன.

இவற்றில் சில பாட்டுக்களை நீங்கள் உடனே கண்டு பிடித்துவிடுவீர்கள். ஆனால், எல்லாப் பாட்டுக்களையும் கண்டுபிடிப்பது சுலபமல்ல. திருக்குறள் புத்தகம் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு குறளாகப் படித்துப் பாருங்கள். சுலபமாக விடை தெரிந்துவிடும்.

30-4-53 க்குள் விடைகளை அனுப்பிவிட வேண்டும். இதற்குப் பரிசு ரூ. 15. எல்லாவற்றையும் சரியாக எழுதியவர் ஒருவருக்கு மேலிருந்தால், பரிசுத் தொகை சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

இப்போட்டியில் 18 வயதுக்குட்பட்டவர்களே கலந்து கொள்ளலாம். விடையுடன் உங்கள் பெயர், தபால் விலாசம், வயது முதலியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள். கவர் அல்லது கார்டின்மேல் கீழ்க்கண்டபடி விலாசம் எழுத வேண்டும்:

போட்டி ஆசிரியர்
'பூஞ்சோலை'
த. பெ. எண் 1803
சென்னை-1







வேடிக்கைக் கதைகள்

★

நன்கொடை

இந்த 'ராவ்-சாகிப்' ராமனுத முதலியார் இருக்கிருரே, அவரிடம் அவருடைய அந்தஸ்துக்குத் தகுந்த ஆட்கள் தான் நெருங்கிப் பேசலாம். வேறு எவருமே அவரிடம் சென்று பேச முடியாது! மந்திரி, ஜட்ஜ், எம். பி., எம். எல். ஏ., டி. எஸ். பி., திவான் பகதூர், ராவ் பகதூர் இந்த மாதிரியானவர்களுக்குத்தான் அவர் பேட்டி அளிப்பார். அப்படிப்பட்ட ராமனுத முதலியாரிடம் அன்று போய்ச் சேர்ந்தார், பரமசிவம்பிள்ளை.

"ஸார்...ஸார்!..." என்று கூப்பிட்டார், பரமசிவம் பிள்ளை.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டே, ராவ்சாகிப் வாசலுக்கு வந்தார்.

"ஜட்ஜ் சங்கரம் பிள்ளையைத் தெரியுமல்லவா, உங்களுக்கு? அவருக்கு......"

'ஜட்ஜ்' என்ற வார்த்தையைக் கேட்டதுமே, ராவ் சாகிப் "வாருங்கள், வாருங்கள். உள்ளே வாருங்கள். உட்கார்ந்து பேசுவோம். ஆமாம், ஜட்ஜ் சங்கரம் பிள்ளைக்கு நீங்கள் உறவோ...?"

"கேளுங்களேன்...அவருடைய மைத்துனர் மகாலிங்கம் பிள்ளை 'எம். பி.' அவர்களையும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.... அவருடைய..."

"ஆமாம்...ஆமாம்...மகாலிங்கம் பிள்ளைக்கு நீங்கள்

உறவா? காபி, பலகாரம் ஏதாவது சாப்பிடுகிறீர்களா? டேய்...யார் அங்கே? பலகாரம், காபி கொண்டுவா!'' என்று கட்டளையிட்டார், ராவ்-சாகிப். வந்திருக்கும் ஆசாமி பெரிய இடத்துப் பேர்வழி என்று புரிந்து கொண்டு விட்டாரல்லவா?

பரமசிவம்பிள்ளை பலகாரத்தையும், காபியையும் ருசி பார்த்துக்கொண்டே பேசினார். "மகாலிங்கம் பிள்ளையின் தம்பி தணிகாசலத்தைத் தெரியுமா?"

"ஆமாம்; ஆமாம். உணவு மந்திரிதானே! ஆமாம், அதுசரி; நீங்கள் இவ்வளவு தூரம் சிரமம் எடுத்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறீர்களே! அடியேனை நாடி வந்தது எதற்காக? இந்த ஏழையால் செய்ய முடிந்தது எதுவாயிருந்தாலும் செய்யக் காத்திருக்கிறேன்'' என்றார்.

"ஒன்றுமில்லை; ஒரு நன்கொடை விஷயமாகத்தான்''

"பூ, இதற்கா? உங்களுக்கு இல்லாததா?'' என்று கூறிய ராவ் சாகிப் ஒரு நூறு ரூபாய் நோட்டைப் பரமசிவம் பிள்ளையிடம் கொடுத்தார். பெரிய இடத்துப் பேர்வழிக்கு உதவி செய்தால், பிற்காலத்தில் அதனால் பெரும் பலன் கிடைக்குமல்லவா? இதை உத்தேசித்தே 'ராவ் சாகிப்' நன்கொடை யளித்தார்.

நோட்டைப் பையில் திணித்தவாறே, "அந்த உணவு மந்திரி தணிகாசலம் இருக்கிறாரே, அவருடைய பங்களாவுக்கு எதிர்த்த வரிசையிலுள்ள ஒரு வீட்டில் இந்த ஏழை குடியிருக்கிறேன்! உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் நாலுபேரின் உதவியால்தான் என் பையன்களுக்குப்பள்ளிச் சம்பளம் கட்ட முடிகிறது. நான் கேட்பதற்கு முந்தியே, நீங்கள் உதவி செய்து விட்டீர்கள்! உங்களை நான் மறக்கவே மாட்டேன்; வரட்டுமா?'' என்று கூறிவிட்டுப் பரமசிவம் பிள்ளை விடை பெற்றுச் சென்றார். திரும்பிக் கூடப் பார்க்கவில்லை! அவர் போவதையே வயிற்றெரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தார், ராவ்சாகிப்.

"அடப் பாவி!" என்பதைத் தவிர வேறெதுவும் அவருக்கு அப்போது சொல்லத் தோன்றவில்லை!

—'சேது'

* * *

ரூ 33/6/-

சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தனர், ராமுவும், கிட்டுவும்.

திடீரென்று கிட்டு கேட்டான்:

"டேய் ராமு!... உனக்கு எவ்வளவுடா வந்தது?"..."

"இருபத்தி எட்டு ரூபாய் ஆறணா வந்ததுடா"

"இருபத்தி எட்டு ரூபாய் ஆறணாவா?...எனக்கு முப்பத்தி மூணு ரூபாய் ஆறணா வந்ததே......!"

"அதென்ன மோப்பா, ஒரு தரத்துக்கு மூன்று தரமாகப் பார்த்துவிட்டேன்......"

"சரியாகப் பார்த்தாயா?............"

"ஹூம்......தம்பிடி விடாமல் பார்த்து விட்டேன்... இதோ...வேணுமானால் இன்னொருதரம் நீயே வேண்டுமானாலும் பார்..."

"வேண்டாம்...வேண்டாம். இப்போது எதுக்கு நடுத்தெருவிலே?......வீட்டுக்குப்போய்ப் பார்க்கலாம்..."

இப்படி ராமுவும் கிட்டுவும் பேசிக்கொண்டு வந்ததைக் கேட்டுக்கொண்டே வந்தான், ஒரு மீசைக்காரன். அவனைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது.

"டேய் தம்பி...." என்று கூப்பிட்டான், மீசைக்காரன். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர், இருவரும். மீசைக்காரனைக் கண்டதும் ஓட்டம் பிடித்தான், ராமு. ஆனால்... கிட்டுவுக்குப் பயத்தினால் ஓடக்கூட முடியவில்லை.



"ஏய், பேசாமல் பணத்தை எடுடா......" என்று மிரட்டினான், மீசைக்காரன்.

"என்ன......! பணமா?...ஏது?........" என்றான் கிட்டு.

"அடே, யாரை ஏய்க்கப் பார்க்கிறாய்? உன்னிடத்திலே இருக்குதே முப்பத்தி மூணு ரூபாய் ஆறணா...அதைத்தான்......" என்றான் மீசைக்காரன்.

"ஓ......அதுவா......? இந்தா?..." என்று கூறியபடியே புத்தகப் பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து அவனிடம் கொடுத்

தான், கிட்டு. ஆசையோடு அதைப் பிரித்துப் பார்த்தான், மீசைக்காரன். அதில் ஒன்றுமே யில்லை.

"டேய் பையா...என்னடா.....விளையாடுகிறாய்?" என்று கத்தினான் மீசைக்காரன்.

"இதோ இருக்குது பார்......" என்று கூறியபடியே நோட்டுப் புத்தகத்தில் ஓரிடத்தைக் காட்டினான், கிட்டு. அதைப்பார்த்த மீசைக்காரனின் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்டது போல் ஆகிவிட்டது!

காரணம், அந்த நோட்டிலே ஒரு கூட்டல் கணக்குப் போடப்பட்டு அதன் கீழே ரூ. 33—6—0 என்று எழுதப் பட்டிருந்ததுதான்!

—'ரோஹிணி'

* * *

குருவும் சந்திரனும்

அப்பொழுதுதான் பாடசாலையின் முதல் மணி அடித்தது. சந்திரன் வகுப்பிற்குள் நுழைந்தான். பிள்ளைகளெல்லாம் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்த பிறகு தான், தான் கணக்குப் போடவில்லை என்ற நினைவு சந்திரனுக்கு வந்தது. உடனே கணக்குப்போட ஆரம்பித்தான்.

ஒரே ஒரு கணக்குத்தான் போட்டிருப்பான். அதற்குள், இரண்டாவது மணி அடித்தது. மணி அடித்து முடிந்ததும் கணக்கு வாத்தியார் சோமசுந்தரம் பிள்ளை உள்ளே நுழைந்தார்.

உள்ளே நுழைந்ததும், தம்முடைய மூக்குக் கண்ணாடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, "எல்லாரும் கணக்குப் போட்டீர்களா?" என்று கேட்டார். சிலர் 'போட்டோம்' என்றனர்; சிலர் வாயே திறக்கவில்லை!

அவர் ஒவ்வொருவருடைய நோட்டையும் பார்த்துக் கொண்டே வந்தார். கடைசியாகச் சந்திரனிடம் வந்தார். சந்திரன், தன் நோட்டை மறதியாக வீட்டிலேயே வைத்துவிட்டு வந்ததாகப் பொய் சொன்னான்.

"சரி, வீட்டுக்குப் போய் எடுத்துக் கொண்டு வா?" என்றார் உபாத்தியாயர்.

சந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; தயங்கி நின்றான்.

"இல்லே சார். நாளேக்குக் கொண்டுவந்து விடுகிறேன்"

"சீ கழுதை, இப்போதே போடா என்ருல் எதிர்த்தா பேசுகிருய்? குரு சொல் கேட்காத கொம்பேறி மூக்கனுயிருக்கிருயே! போகிருயா, என்ன?" என்று கூறிக் கொண்டே பிரம்பை ஓங்கினுர், வாத்தியார்.

வீட்டில் கணக்குப் போட்டு வைத்திருந்தால் தானே, கொண்டு வருவதற்கு? வேறு வழியின்றி, 'சரி' என்று வகுப்பை விட்டு வெளியே வந்தான். எங்கெங்கோ சுற்றித் திரிந்துவிட்டு மாலேயில் வீட்டுக்குச் சென்ருன்.

வீட்டிற்கு வந்ததும், முன் அறையில் அவன் அப்பாவும் வேறு ஒருவரும் பேசிக்கொண்டிருந்தது அரைகுறையாகக் கேட்டது. உற்றுக்கேட்டான். அடிக்கடி 'சந்திரன்' என்ற வார்த்தையும் 'குரு' என்ற வார்த்தையும் கேட்டன.

இதைக்கேட்ட சந்திரன், "நம் குரு நம்மை வீட்டுக்குச் சென்று கணக்கு நோட்டுக் கொண்டுவரச் சொன்னதையும், நாம் வாத்தியாரை ஏமாற்றிவிட்டுச் சுற்றித் திரிந்ததையும் யாரோ கூறுகிருர்கள் போலிருக்கிறது. அதுதான் அடிக்கடி 'சந்திரன்' 'சந்திரன்' என்று என் பெயரும், எங்கள் குரு பெயரும் அடிபடுகின்றன" என்று நினைத்தான். மெல்ல அடுப்பங்கரைக்குச் சென்ருன்.

"அம்மா, யார் முன் அறையில் பேசிக்கொண்டிருப்பது?" என்று கேட்டான்.

"பாலக்காட்டிலிருந்து ஒரு ஜோஸ்யர் வந்திருக்கிருர். அவர் உன் அப்பாவின் ஜாதகத்தைப் பார்க்கிருர்" என்ருள்.

அப்போதுதான் அவனுக்கு விஷயம் விளங்கியது. "குரு சந்திரனைப் பார்க்கிருன்" என்று ஜோஸ்யர் கூறியதைத்தான் அவன் அப்படி நினைத்துப் பயந்து போய்விட்டான். உடனே, அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனுலும், "நாளே பள்ளிக்குச் சென்றதும் பிரம்பும் கையுமாக நம்மை வரவேற்கத் தயாராக இருப்பாரே, கணக்கு வாத்தியார்!" என்பதை நினைத்ததும் சிரிப்பு மறைந்து விட்டது!

—'புவியரசன்'

199249

Edited, Printed and Published by Rama. Arunachalam, at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1. Hon. Editor: AL. Valliappa.

குழந்தைகள் நூல் நிலையங்களில் அவசியம் இருக்க வேண்டியவை

ராமுவும் நானும்
—நா. கி. நாகராசன், M.A. ரூ. 1 0 0

வேட்டை நாய்
—அழ. வள்ளியப்பா ரூ. 0 12 0

வண்ணத்திப்பூச்சி
—கல்யாணி ரூ. 0 6 0

ராஜாமணி
—பூவண்ணன் ரூ. 0 6 0

பூஞ்சோலை

135, பவழக்காரத் தெரு,

சென்னை - 1.

SHANTI PRESS, MADRAS-1